Find us on facebook/tamilmirror Follow us on tamilmirror epaper/tamilmirror.lk

# தமிழ்Mirror

www.tamilmirror.lk

THURSDAY, AUGUST 22, 2024

வியாழக்கிழமை ஆகஸ்ட் 22, 2024 | ஒளி: 10 கதிர்: 034 | பக்கம்:06 | நகரப்பதிப்பு★ FREE



**ரணிலையும் சஜித்தையும் இணைக்க தான் மேற்கொண்ட முயற்சிகள் பயனளிக்கவில்லை. ஆகையால் மனச்சாட்சிப்படி என்னால் செயல்பட முடியாது என்பதால் இவ்வாறான தீர்மானம் ஒன்றை எடுக்கவேண்டிய நிலைமை ஏற்பட்டது**

**சஜித் பிரேமதாசவுக்கு விரைவாக ஜனாதிபதியாக வேண்டும் என்ற எண்ணம் இருக்கிறதோ என்று சில சந்தர்ப்பங்களில் நான் நினைக்கிறேன். அவர் ஜனாதிபதியாவதற்கு இன்னும் காலம் இருக்கின்றது. எனினும், அவர் அவசரப்படுகிறார்**

# “இரு முனை போட்டி முட்டாள்தனமானது”

## எம்.பி. பதவியை துறந்து தலதா அறிவித்தார்

ஒரே கட்சியைச் சேர்ந்த இரண்டு பேர் பிளவுபட்டு இரண்டு முனைகளில் போட்டியிடுவது முட்டாள்தனமான செயல். ரணிலையும் சஜித்தையும் இணைக்க தான் மேற்கொண்ட முயற்சிகள் பயனளிக்கவில்லை. ஆகையால் மனச் சாட்சிப்படி என்னால் செயல்பட முடியாது என்பதால், எம்.பி. பதவியிலிருந்து இராஜினாமா செய்வதாக ஐக்கிய மக்கள் சக்தியின் இரத்தினபுரி மாவட்ட எம்.பியான சட்டத்தரணி தலதா அத்துகோரள அறிவித்தார்.

பாராளுமன்றம் புதன்கிழமை (21) சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் கூடியது. விசேட அறிக்கை ஒன்றை விடுத்து உரையாற்றிய பின்னர் இராஜினாமா செய்தார்.

இதன்போது, எனது சகோதரர் காமினி அத்துகோரளவின் மறைவுக்கு பின்னர் 2004ஆம் ஆண்டு இந்த பாராளுமன்றத்துக்கு வந்தேன். எனது சகோதரர் ஐக்கிய தேசிய கட்சிக்காக பல அர்ப்பணிப்புகளை செய்து பாதுகாத்துவந்தார். எந்த சந்தர்ப்பத்திலும் கட்சியை விட்டு பிரிந்து செல்ல தீர்மானிக்கவில்லை. நானும் அவ்வாறே இந்த கட்சிக்காக பாடுபட்டு வந்தேன். என்றாலும் பல்வேறு காரணங்களின் அடிப்படையில் கட்சிக்குள் ஏற்பட்ட உள்ளக முரண்பாடுகள் காரணமாக 2020 பொதுத் தேர்தலுடன் கட்சி பிளவுபட்டது. இதற்கு முன்னர் பல தடவைகள் கட்சி பிளவுபடும் நிலைக்கு சென்றபோதும் கட்சி பிளவுபடாமல் பாதுகாக்கப்பட்டது.

தொடர்ச்சி P2

# “தமிழர்கள் மத்தியில் குழப்பம்”

தமிழ் மக்களின் அபிமானம் பெற்ற தலைவர்களான ரணில் விக்கிரமசிங்கவும் சஜித் பிரேமதாசவும் இம்முறை பிரிந்து நின்று ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதனால் இந்த முறை தமிழ் மக்கள் யாருக்கு வாக்களிப்பது என்ற நெருக்கடிக்கு, குழப்பத்துக்கு ஆளாகியுள்ளனர். என ஐக்கிய மக்கள் சக்தியின் இரத்தினபுரி மாவட்ட எம்.பி.யும் முன்னாள் நீதி அமைச்சருமான சட்டத்தரணி தலதா அத்துகோரள தெரிவித்தார்.

பாராளுமன்றம் புதன்கிழமை (21) சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் கூடியது. தனது ராஜினாமாவை அறிவிக்கும் முன்னர் விசேட கூற்றொன்றை விடுத்து உரையாற்றும் போது மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

# தாவினார் கொடிதுவக்கு

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் மாத்தறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரான கருணாதாச கொடிதுவக்கு, ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாசவுக்கு ஆதரவு தெரிவித்து ஆளும் கட்சியில் இருந்து எதிர்க்கட்சிக்கு தாவினார்.



தொடர்ச்சி P2

# 8 இல் ஐ.தே.க.; 9 இல் ஐ.ம.ச.



ஒன்பதாவது பாராளுமன்றத்தின் பாராளுமன்ற உறுப்பினராக பந்துலலால் பண்டாரிகொட சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன முன்னிலையில் புதன்கிழமை (21) சத்தியப்பிரமாணம் செய்துகொண்டார்.

சத்தியப்பிரமாணம் செய்து கொண்டதன் பின்னர் பாராளுமன்ற செயலாளர் நாயகம் குஷானி ரோஹணதீர முன்னிலையில் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான ஏட்டிலும் அவர் கையொப்பமிட்டார்.

ஐக்கிய மக்கள் சக்தியைப் பிரதிநிதித்துவப்படுத்தி காலி மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினராகப் பணியாற்றிய மனுஷ நாணயகார பாராளுமன்ற உறுப்பினர் பதவியிலிருந்து நீக்கப்பட்டதைத் தொடர்ந்து ஏற்பட்ட வெற்றிடத்துக்கே பந்துலலால் பண்டாரிகொட இவ்வாறு நியமிக்கப்பட்டுள்ளார்.

தொடர்ச்சி P2

# வடிவேல் சுரேஷ், அலிசாஹிருக்கு நியமனம்



பாராளுமன்ற உறுப்பினர் வடிவேல் சுரேஷ், தொழில் இராஜாங்க அமைச்சராக ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க முன்னிலையில் பதவிப்பிரமாணம் செய்து கொண்டார்.

இதேவேளை, அபிவிருத்தி திட்டங்களுக்கான அமைச்சரவை அந்தஸ்தற்ற அமைச்சராக அலிசாஹிர் மௌலானா நியமிக்கப்பட்டுள்ளார். இவ்விரு நியமனங்களும் புதன்கிழமை(21) வழங்கப்பட்டுள்ளன.

# “கனவு காண்பவர் அவதானிக்கவும்”

சீனாவின் ஒரு மண்டலம் ஒரு பாதை அபிவிருத்தி செயற்திட்டம் அமுல்படுத்தப்படும் நாடுகளில் திட்டமிட்ட வகையில் உள்ளக முரண்பாடுகள் தோற்றுவிக்கப்படுகின்றன. இலங்கையிலும், பங்களாதேஷ் நாட்டிலும் இவ்வாறே முரண்பாடுகள், கலவரங்கள் தோற்றுவிக்க ப்பட்டன.

தொடர்ச்சி P2



# “சூதாட்ட, கறுப்புப் பணம் விளையாடுகின்றது”

ஜனாதிபதித் தேர்தலில் கறுப்புப் பணம், பாதாள குழுக்களின் பணம், போதைப் பொருள் பணம் மற்றும் சூதாட்ட பணம் அதிகளவில் பயன்படுத்தப்படுகின்றது என்று சுயேச்சை ஜனாதிபதி வேட்பாளரான பாராளுமன்ற உறுப்பினர் ரொஷான் ரணசிங்க தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் புதன்கிழமை (21) விசேட கூற்றை முன்வைத்து உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கூறினார்.

மேலும் அவர் தெரிவிக்கையில், ஜனாதிபதித் தேர்தல் சுதந்திரமானது என்றாலும் நீதியானதா? என்ற கேள்விகள் எழுகின்றன. தேர்தல்கள் ஆணைக்குழுவே முதலில் அநீதியை இழைக்கின்றது. சில வேட்பாளர்களுக்காக அவர்களின் உதவியாளர்களை அழைத்துவர தனியான இடம் ஒதுக்கியுள்ளது.

39 வேட்பாளர்கள் வேட்பு மனுக்களை தாக்கல் செய்கையில் 4 வேட்பாளர்களுக்காக மட்டும் இடம் ஒதுக்குவது அவர்களுக்காக ஊக்குவிப்பாகவே அமைகின்றது.

இதனை செய்ய முடியுமா? இதேவேளை உள்ளூராட்சித் தேர்தலில் வாக்காளர் ஒருவருக்காக 20 ரூபாவே செலவிட முடியும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. ஆனால் ஜனாதிபதித் தேர்தலில் வேட்பாளர் ஒருவரால் 109 ரூபா செலவிட முடியுமென அறிவித்துள்ளது.



தொடர்ச்சி P2



# ‘புலி’ தங்கத்தை தேடியவர் கைது

போரின் போது தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பினால் புதைக்கப்பட்டதாக கூறப்படும் தங்கம் மற்றும் பணத்தை தேடிய நபர் ஒருவரை கைது செய்துள்ளதாக ஓமந்த பொலிஸார் தெரிவித்தனர்.

தொடர்ச்சி P2



# “அநாதை அரசியல்வாதிகள் பொய்களை பரப்புகின்றனர்”

அனைத்து மதங்களினதும் சுதந்திரமான வழிப்பாட்டு உரிமைகளையும் அனைத்து கலாசார உரிமைகளையும் பேணி பாதுகாத்து முன்னெடுத்துவருவதை ஏற்றுக்கொள்கின்ற ஒரு அரசியல் இயக்கமே தேசிய மக்கள் சக்தியாகும் எனத் தெரிவித்துள்ள அந்த சக்தியின் ஜனாதிபதி வேட்பாளர் அநுரகுமார திஸாநாயக்க, அநாதை அரசியல்வாதிகள் பொய்களைப் பரப்புகின்றனர் என்றார்.

தேசிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளர் அநுர குமார திசாநாயக்க அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமா அமைப்பின் பிரதானி அஷ்சேக் முஃப்தி ஏ.ஜே.ஏ.ரிஷ்வி, அஷ்சேக் அர்கம் நுரஅமித் மற்றும் கலாநிதி ஏ.ஏ.அஹமட் அஷ்வர் ஆகியோரை ஜயந்த வீரசேகர மாவத்தையில் அமைந்துள்ள அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமா சபையின் தலைமை அலுவலகத்தில் புதன்கிழமை (21) சந்தித்தார்.

நாட்டில் நிலவுகின்ற அரசியல் நிலைமைகள் பற்றி முஃப்திமார்களுடனும் நிர்வாக மௌலவிமார்களுடனும் கலந்துரையாடிய அநுரகுமார திசாநாயக்க, எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெறுவதற்கான நல்லாசியையும் பெற்றுக்கொண்டார்.

தொடர்ச்சி P2

# பராட்டே கைவிடப்பட்டால் நிவாரணங்கள் தொடருமா?

பராட்டே சட்டமூலம் கைவிடப்பட்டாலும், அரசாங்கத்தினால் அவர்களுக்கு வழங்கப்பட்ட நிவாரணங்கள் தொடருமா என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச சபையில் கேள்வி எழுப்பினார் பாராளுமன்றத்தில் புதன்கிழமை(21) விசேட கூற்றை முன்வைத்தே இவ்வாறு கேள்வி எழுப்பிய அவர் மேலும் பேசுகையில், பராட்டே சட்டமூலத்தினால் சிறிய மற்றும் நடுத்தர உற்பத்தியாளர்கள் மற்றும் சுற்றுலா ஆகிய துறைகளில் பாதிக்கப்பட்டவர்கள் குறித்து எதிர்க்கட்சி கொடுத்த அழுத்தம் காரணமாக பராட்டே சட்டமூலம் கைவிடப்பட்டாலும், அரசாங்கத்தினால் அவர்களுக்கு வழங்கப்பட்ட நிவாரணங்கள் தொடருமா என தெரிந்துகொள்ள வேண்டும்.

இந்தத் தொழிற்துறையில் ஈடுபட்டவர்களின் சொத்துக்களில் எந்த அளவிலான சொத்துக்கள் கடந்த வருடம் ஏலத்தில் விடப்பட்டிருக்கிறது என்பது குறித்தும் அறிந்து கொள்ள வேண்டியுள்ளது.

அதேபோன்று வங்கிகளின் ஊடாக பிரதான கடன்களை மீளப் பெற்றுக் கொள்வது தொடர்பான விதிகள் சட்டமூலத்தில் மாற்றங்களைக் கொண்டு வருவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். அவ்வாறு இல்லை என்றால் பாதிக்கப்பட்டவர்கள் தொடர்பில் அரசாங்க முன்னெடுக்கும் நீண்ட மற்றும் குறுகிய கால நடவடிக்கை என்ன என்பது குறித்தும் அறிந்து கொள்ள வேண்டும்.

**பாராட்டே சட்டத்தை நடைமுறைப் படுத்துவதைத் தற்காலிகமாக இடை நிறுத்தினாலும், அந்தக் காலத்தில் அந்த செலவை ஈடு செய்கின்ற வகையில் அவர்களுக்கான மூலதனத்தைப் பெற்றுக் கொடுப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவில்லை**



தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

## “தமிழர்கள் மத்தியில் குழப்பம்”

2005 ஜனாதிபதி தேர்தலில் எமது வேட்பாளர் ரணில் விக்ரமசிங்க தோல்வியடைய தமிழ் மக்கள் வாக்களிக்காமையே பிரதான காரணமாக இருந்தது , ராஜபக்சவினரின் சதி நடவடிக்கைக்குள் சிக்குண்டு வடக்கு கிழக்கு மக்கள் வாக்களிப்பு பகிஷ்கரிப்புக்கு ஆளாகினர். அன்று அவர்கள் வழமைபோன்று வாக்களித்திருந்தால். ரணில் விக்ரமசிங்க ஜனாதிபதியாகி இருந்திருப்பார். அதனால் அன்று அவர்கள் விட்ட தவறை திருத்திக்கொள்வார்கள் என்பது உறுதி .

அதன்பின்னர் 2019 ஆம் ஆண்டு ஜனாதிபதி தேர்தலில் கோட்டாபய ராஜபக்ஷ ,சஜித் பிரேமதாச ஆகியோர் போட்டியிட்டபோது வடக்கு,கிழக்கு தமிழ் மக்கள் சஜித் பிரேமதாசாவுக்கு வாக்களித்தார்கள்.

என்றாலும் காலாகாலமாக எமது அணிக்கு வாக்களித்துவந்த வடக்கு கிழக்கு மக்களுக்கும் இந்த முறை தீர்மானம் எடுக்க முடியாத நிலையை ரணில் விக்கிரமசிங்கவும் சஜித் பிரேமதாசவும் ஏற்படுத்தி இருக்கிறார்கள் அதாவது இந்த முறை தமிழ் மக்களின் அபிமானம் பெற்ற இவ்விரு வேட்பாளர்களும் பிரிந்து நின்று தேர்தலில் போட்டியிடுவதனால் இந்த முறை தமிழ் மக்கள் குழப்பத்துக்கு ஆளாகியுள்ளனர். சஜித் பிரேமதாச இன்னும் 5 வருடங்களுக்கு பொறுத்திருந்தால், இந்த பாரிய சவால் இருக்காது என்றார்.

## “இரு முனை போட்டி முட்டாள்தனமானது”

இந்நிலையில், எமது கட்சியின் தலைவரும் பிரதித் தலைவரும் வெவ்வேறு முனைகளில் ஜனாதிபதி வேட்பாளராகத் தேர்தலில் போட்டியிடுகின்றனர். இதனைத் தனது மனசாட்சிக்கு எதிராக ஏற்றுக்கொள்ள முடியாது. இது நாடு தொடர்பில் சிந்திக்காமல் சுயநலமாக எடுக்கப்பட்ட தீர்மானமாகவே நான் பார்க்கிறேன். எதிர்காலத்தில் இது உறுதிப்படுத்தப்படும் என நான் நம்புகிறேன். இதைத் தெரிவிக்காவிட்டால் இந்த பாவத்தில் இருந்து எனக்குத் தப்ப முடியாது. அதனால் இந்த நிலையில் ஒரு தீர்மானம் எடுக்க வேண்டிய நிலை எனக்கு ஏற்பட்டது. அந்த தீர்மானம் எனக்கு வாக்களித்த மக்களின் தீர்மானத்துக்கு விரோதமாக இருக்கக் கூடாது என நினைத்தேன்.

பாராளுமன்ற உறுப்பினர் பதவியைக் கைவிடுவது எனக்கு எந்தவகையிலும் கவலையாக இருக்கப்போவதில்லை. தம்முடன் இணைந்துகொள்ளுமாறு ரணில் விக்ரமசிங்க தொடர்ந்து தெரிவித்துவந்தபோதும், அதனை சஜித் பிரேமதாச நிராகரித்து வந்தது ஏன் என்பதை என்னால் இதுவரை நினைத்துப்பார்க்க முடியாமல் இருக்கிறது. சஜித் பிரேமதாசவுக்கு விரைவாக ஜனாதிபதியாக வேண்டும் என்ற எண்ணம் இருக்கிறதோ என்று சில சந்தர்ப்பங்களில் நான் நினைக்கிறேன் என்றார். .

அரசியல் செய்யும்போது, எந்தளவு பொறுமையாக இருக்கவேண்டும் என்பதை எமது தலைவர்களே நடைமுறையில் ஒப்புவித்திருக்கின்றனர். அதில் இருந்து தற்போதாவது கற்றுக்கொள்ள வேண்டி இருக்கிறது. நாட்டின் தலைமைத்துவ பதவியை ஏற்றுக்கொள்ள முன்னர், தற்போதுள்ள நிலையில் அதனை ஏற்றுக்கொள்ள முடியுமா, அதற்கான சூழல் இருக்கிறதா என தேடிப்பார்க்க வேண்டும். நாட்டின் தலைவராக இருந்து எடுக்கும் தீர்மானம் மூலம் நாடு வீழ்ச்சியடைந்தால், அதன் பொறுப்பை ஏற்றுக்கொள்ள முடியுமா என்று பார்க்க வேண்டும்.

எமது நாட்டு அரசியல் தலைவர்கள் கோட்டாபய ராஜபக்ஷவிடம் பாடம் கற்றுக்கொள்ள வேண்டி இருக்கிறது. அதிகாரத்தை பெற்றுக்கொள்ள முயற்சித்தாலும், அதனை எவ்வாறு பாதுகாப்பது என சிந்திக்க வேண்டும். எனவே, ஒரே கட்சியைச் சேர்ந்த இரண்டு பேர் பிளவுபட்டு இரண்டு முனைகளில் போட்டியிடுவது முட்டாள்தனமான செயல் என்றே தெரிவிக்கிறேன் என்றார்.

## ‘புலி’ தங்கத்தை தேடியவர் கைது

காணியை பரிசோதிக்கும் ஸ்கேனரைப் பயன்படுத்தி அகழ்வுகளை மேற்கொள்ளத் தயாராக இருந்த நபர் ஒருவர் தொடர்பில் இராணுவப் புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போது சந்தேகநபர் கைது செய்யப்பட்டார். அத்துடன் ஸ்கேனர் இயந்திரம் ஒன்றும் கைப்பற்றப்பட்டுள்ளது.

மேலும் இரண்டு சந்தேக நபர்கள் அங்கிருந்து தப்பி ஓடிவிட்டனர், மேலும் அந்தந்த சந்தேக நபர்களுக்கு சொந்தமான கையடக்க தொலைபேசி, மோட்டார் சைக்கிள் மற்றும் தோண்டுவதற்கு பயன்படுத்தப்பட்ட சில உபகரணங்களை பொலிஸார் கைப்பற்றினர். கைது செய்யப்பட்ட சந்தேக நபர் 54 வயதுடைய ஓமந்த பிரதேசத்தை சேர்ந்தவர் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

## “அநாதை அரசியல்வாதிகள் பொய்களை பரப்புகின்றனர்”

பாராளுமன்றத்தில் நான் கூறிய ஒரு விடயத்தை திரிபுபடுத்திக் கொண்டுச் செல்கிறார்கள். பாராளுமன்ற உறுப்பினர் ரவூப் ஹக்கீம் இதனைப் பற்றி பகிரங்கமாகக் கூறிவருகிறார். அரசியல் ரீதியாக நிர்க்கதி நிலையுற்றுள்ள குழுக்களின் பிரதான பணியாக இது அமைந்துள்ளது
மொழி ரீதியாக, மத ரீதியாக அதைப்போலவே கலாச்சார ரீதியாக எமது நாட்டில் பிளவுகளை வைத்துக்கொள்ளக்கூடாது. நாங்கள் இலங்கையர்கள் என்ற வகையில் ஒன்று சேரவேண்டுமென நம்புகின்ற ஒரு இயக்கமாகும். அன்று நான் பாராளுமன்றத்தில் மிகவும் தெளிவாகச் சுட்டிக்காட்டியது எமது நாட்டில் வன்முறையும் முரண்பாடுகளும் உருவாவது அந்தந்த சமூகத்தில் நிலவுகின்ற தீவிரவாத அரசியலின் காரணமாகவேயாகும் என்றார்.

எங்களுக்குத் தெரியும் சிங்கள சமூகத்தில் தீவிரவாத செயற்பாடுகள் தான் வன்முறைகளுக்கு அழைப்புவிடுக்கின்றன. அதைபோலவே தமிழ் சமூகத்தில் நிலவுகின்ற தீவிரவாத கூற்றுக்கள் தீவிரவாத செயற்பாடுகள் தான் வன்முறைக்கு வழிசமைத்தன. அதைபோலத்தான் முஸ்லிம் சமூகத்திலும் தீவிரவாத செயற்பாடுகள் தான் வன்முறைக்கு வழிசமைத்தது. அது ஒட்டுமொத்த மக்களுமல்ல என்றார்.
அந்த தீவிரவாதத்தில் ஒட்டுமொத்த முஸ்லிம், சிங்கள மற்றும் தமிழ் மக்களும் இல்லை. எனினும் அத்தகைய மிகவும் சிறிய குழுக்கள் நிலைமையை திரிபுப்படுத்தி உண்மையான இறைவனோ அல்லது புத்த பிரானோ உபதேசித்த விடயங்களுக்குப் பதிலாக அதற்கு தாமாகவே வியாக்கியானம் கற்பித்து சமூகத்தைத் தீவிரவாதத்தை நோக்கிக் கொண்டு செல்கின்றன என்றார்.

## தாவினார் கொடிதுவக்கு

பாராளுமன்றத்தில் புதன்கிழமை (21) விசேட அறிவித்தலை வெளியிட்ட பின்னர் அவர், அரசாங்க பக்கத்தில் இருந்து சென்று எதிர்க்கட்சி பக்கம் சென்று அமர்ந்துகொண்டார்.

எதிர்க்கட்சி பக்கம் வந்த கருணாதாச கொடிதுவக்குவை ஐக்கிய மக்கள் சக்தி பாராளுமன்ற உறுப்பினர்கள் மேசையில் தட்டி வரவேற்றனர்.

தான் எதிர்க்கட்சி பக்கம் செல்ல முன்னர் அது தொடர்பில் உரையாற்றிய கருணாதாச கொடிதுவக்கு கூறுகைகயில், கடந்த பொதுத் தேர்தலில் மாத்தறை மாவட்டத்தில் ஶ்ரீலங்கா பொதுஜன பெரமுனவை பிரதிநிதித்துவப்படுத்தி ஒரு இலட்சத்து 15 ஆயிரம் வாக்குகளை பெற்று மாவட்டத்தில் விருப்பு வாக்குகளில் இரண்டாம் இடத்தை பெற்று பாராளுமன்றத்திற்கு தெரிவானேன்.

ஶ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் மீதும் நாட்டின் பாதுகாப்பின் மீதும் நம்பிக்கை வைத்தே மக்கள் கட்சிக்கு வாக்களித்தனர். ஆனால் எமது தலைவர்கள் 69 இலட்சம் மக்கள் ஆணையையும் முழுமையாக சீர்குலைத்துள்ளனர்.

இந்நிலையில் இப்போது எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச மீது நம்பிக்கை வைக்க முடியும் என்று தெரிகின்றது என்றார்.

## “கனவு காண்பவர் அவதானிக்கவும்”

ஜனாதிபதியாகக் கனவு காண்பவர்கள் அனைவரும் இந்த உண்மையை விளங்கிக் கொள்ள வேண்டியது அவசியம் என தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரும் சுயாதீன எதிரணி எம்.பியுமான விமல் வீரசன்ச தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் புதன்கிழமை (21) இடம்பெற்ற மது வரி கட்டளைச் சட்ட ஒழுங்கு விதிகள் மீதான விவாதத்தில் உரையாற்றிய போதே இவ்வாறு தெரிவித்த அவர் மேலும் பேசுகையில், கொழும்பு துறைமுக அபிவிருத்தி நகரத்துக்குச் சீனாவே முழுமையாக முதலீடு செய்துள்ளது. ஆகவே துறைமுக நகர அபிவிருத்தி திட்டத்தால் இலங்கைக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படவில்லை.அவ்வாறான நிலையில் கொழும்பு துறைமுக நகரத்தை நிர்மாணித்தால் சீகிரியா குன்றில் உள்ள கற்களைப் பெயர்த்து எடுக்க நேரிடும் என்று குறிப்பிட்டவர்கள் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடுவது நகைப்புக்குரியதாக உள்ளது.

பங்களாதேஷ் நாட்டில் இடம்பெற்ற கலவரத்துக்கும் 2022 ஆம் ஆண்டு இலங்கையில் இடம்பெற்ற போராட்டத்துக்கும் இடையில் பல ஒற்றுமைகள் உள்ளன . பங்களாதேஷ் நாட்டில் காலம் காலமாக அமுல்படுத்தப்படும் கோட்டா முறைமைக்கு எதிராக மாணவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டார்கள். கோட்டா முறைமையை நீதிமன்றம் திருத்தியமைத்த தன் பின்னர் பிரதமர் ஷேக் ஹசீனாவை பதவி விலகுமாறு வன்முறைகளில் ஈடுபட்டார்கள்.

போராட்டம் தீவிரமடைந்தததால் ஷேக் ஹஸீனா இந்தியாவுக்கு தப்பியோடியதன் பின்னர் ஊடகங்களுக்கு ஒரு விடயத்தைப் பகிர்ந்துள்ளார். பங்களாதேஷுக்கு சொந்தமான தீவு பகுதி ஒன்றை அமெரிக்கா கோரியது அதற்கு இடமளித்திருந்தால் போராட்டம் தோற்றம் பெற்றிருக்காது என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

சீனாவின் ஒரு மண்டலம் ஒரு பாதை அபிவிருத்தி செயற்திட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ள நாடுகளில் உள்ளக முரண்பாடுகளும், போராட்டங்களும் திட்டமிட்ட வகையில் தோற்றுவிக்கப்படுகின்றன. பங்களாதேஷ், இலங்கை, பாகிஸ்தான் ஆகிய நாடுகளில் இந்த நிலைமையே காணப்பட்டது. ஆகவே, ஜனாதிபதியாகக் கனவு காண்பவர்கள் இந்த உண்மையை விளங்கிக் கொள்ள வேண்டியது அவசியம் என்றார்.

## பராட்டே கைவிடப்பட்டால் நிவாரணங்கள்...

அதேபோன்று சிறிய மற்றும் நடுத்தர உற்பத்தியாளர்கள் தொடர்பில் தேசிய கொள்கை திட்டம் ஒன்று தயாரிப்பது குறித்து அரசாங்கம் கவனம் செலுத்தியுள்ளதா? இந்த நாட்டில் உள்ள தொழில் முனைவர்கள் அல்லது புத்தாக்க துறையை மேம்படுத்துவதற்கு அரசாங்கம் வழங்கியுள்ள பங்களிப்புக்குக் குறித்தும் அறிந்து கொள்ள வேண்டும்.

கடந்த நான்கு வருட காலமாக பாரிய முயற்சிகளில் ஈடுபட்டு இருக்கின்ற சிறிய மற்றும் நடுத்தர உற்பத்தியாளர்கள் தொடர்பில் கொண்டுவரப்பட்ட பாராட்டே சட்டத்தை நடைமுறைப்படுத்துவதைத் தற்காலிகமாக இடை நிறுத்தினாலும், அந்தக் காலத்தில் அந்த செலவை ஈடு செய்கின்ற வகையில் அவர்களுக்கான மூலதனத்தைப் பெற்றுக் கொடுப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவில்லை. தொழில்துறையாளர்களின் கடனை புதிதாக மறுசீரமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கவில்லை என்றார்.

## “சூதாட்ட, கறுப்புப் பணம்...

அப்படியென்றால் 18,500 இலட்சம் ரூபா அவசியமாகும்.

இது சிறிய தொகையல்ல. அதேபோன்று, சில ஊடகங்களும் ஒவ்வொரு வேட்பாளர்களுக்காகவும் செயற்படுகின்றது. 39 பேருக்கும் சம உரிமையை வழங்க வேண்டும். ஆனால், அப்படி நடப்பதில்லை. இதேவேளை, பெப்ரல் நிறுவனமும் அநீதியான முறையில் நடந்துகொள்கின்றது. விவாதத்திற்காக 6 பேரை மாத்திரம் அந்த நிறுவனம் அழைக்கின்றது.

இது நீதியான தேர்தலா? செலவு கட்டுப்பாடு தொடர்பான சட்டத்தின் எதிர்பார்ப்பு என்ன? கறுப்புப் பணம், போதைப் பொருள் பணம், பாதாள குழுக்களின் பணம், சூதாட்ட பணம் என்பன இந்தத் தேர்தலில் புழக்கத்தில் உள்ளது.

இப்படி போனால், எதிர்காலத்தில் நாடு அழிவையே எதிர்நோக்கும். நாட்டின் கடன் தொகை அதிகரித்துள்ளதுடன், டொலர் விலையும் அதிகரித்துள்ளது. 225 பாராளுமன்ற உறுப்பினர்களும் விசேட அவதானம் செலுத்த வேண்டும் என்றார்.

## 8 இல் ஐ.தே.க...

பந்துலலால் பண்டாரிகொட எட்டாவது பாராளுமன்றத்தில் ஐக்கிய தேசியக்கட்சியைப் பிரதிநிதித்துவப்படுத்தி பாராளுமன்ற உறுப்பினராகப் பணியாற்றியிருந்தார்.

## சஜித்தை சந்தித்தார் ஹரீஸ்

நூருல் ஹுதா உமர்

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும், முன்னாள் அமைச்சருமான சட்டத்தரணி ரவூப் ஹக்கீம் மற்றும் பாராளுமன்ற உறுப்பினரும், முன்னாள் இராஜாங்க அமைச்சருமான சட்டத்தரணி எச்.எம்.எம். ஹரீஸ் ஆகியோருக்கு எதிர்க்கட்சித் தலைவரும், ஜனாதிபதி வேட்பாளருமான சஜித் பிரேமதாச விடுத்திருந்த அழைப்பின் பேரில் பாராளுமன்ற கட்டிடத்தொகுதியில், புதன்கிழமை (21) இருவரும் சஜித் பிரேமதாசவை சந்தித்து சமகால அரசியல் சூழ்நிலைகள் சம்பந்தமாகக் கலந்துரையாடினர்.

இதன்போது கிழக்கு மாகாண மக்களின் பிரச்சினைகள், கோரிக்கைகள், சமகாலத்தில் முஸ்லிம்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள், சமூகம் சார்ந்த பிரச்சினைகள் தொடர்பில் திகாமடுல்ல மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும், முன்னாள் இராஜாங்க அமைச்சருமான சட்டத்தரணி எச்.எம்.எம். ஹரீஸ் எதிர்க்கட்சித் தலைவரும், ஜனாதிபதி வேட்பாளருமான சஜித் பிரேமதாசவிடம் எடுத்துரைத்திருந்தார்.

இங்கு கலந்து கொண்டிருந்த ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும், முன்னாள் அமைச்சருமான சட்டத்தரணி ரவூப் ஹக்கீம் அவர்கள் முஸ்லிம் சமூகம் சார்ந்த விடயங்கள் தொடர்பில் பல விஷயங்களை வலியுறுத்தியிருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.



## “800 கோடி ரூபாவை அறவிடவில்லை”

உள்நாட்டு இறைவரி, மதுவரி மற்றும் சுங்கத் திணைக்களம் இந்த ஆண்டு முதல் ஆறு மாத காலப்பகுதியில் மாத்திரம் 168,000 கோடி ரூபாவை திரட்டிக் கொண்டுள்ள நிலையில் மதுவரி திணைக்களம் பிரதான மதுபான நிறுவனங்களிடமிருந்து 800 கோடி ரூபாய் வரியை இதுவரை அறவிடவில்லை என பாராளுமன்ற வழிவகைகள் பற்றிய குழுவின் தலைவரும் எம்.பியுமான பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் புதன்கிழமை (21) பாராளுமன்ற வழிவகைகள் பற்றிய குழுவின் அறிக்கையைச் சபைக்குச் சமர்ப்பித்து உரையாற்றும் போதே இவ்வாறு தெரிவித்த அவர் மேலும் பேசுகையில்,

அரச வருவாயை ஈட்டிக் கொள்வதற்குப் பல யோசனைகளை முன்வைத்துள்ளோம். உள்நாட்டு இறைவரித் திணைக்களம், மதுவரித் திணைக்களம் மற்றும் சுங்கத் திணைக்களம் ஆகிய மூன்று அரச நிறுவனங்கள் கடந்த ஆறு மாத காலப்பகுதிக்குள் மாத்திரம் 168,000 கோடி ரூபாவுக்கு மேல் வருமானமாக ஈட்டியுள்ளன.


2022 ஆம் ஆண்டு காலப்பகுதியில் வரி விலக்களித்ததால் 97,800 கோடி ரூபாய் இழக்கப்பட்டதாகக் குறிப்பிடப்பட்டது.வரி செலுத்தாதவர்களின் 900 வங்கி கணக்குகளை முடக்குவதற்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. அத்துடன் 18 வயதுக்கு மேற்பட்ட 17 மில்லியன் பேருக்கு வரி செலுத்துவோர் அடையாள எண் (டின் இலக்கம்) வழங்க உரிய நடவடிக்கைகளை முன்னெடுக்க பரிந்துரைத்தோம்.இதற்கமைய 5 மில்லியன் பேருக்கு டின் இலக்கம் வழங்கப்பட்டுள்ளது.

தங்க இறக்குமதி யாளர்களிடமிருந்து வரி அறவிடல் குறித்துச் சிக்கல் காணப்படுகிறது. இதற்கான ஆலோசனைகளைக் குழுவின் ஊடாக வழங்கியிருந்தோம். இதற்கமைய பிரதான தங்க இறக்குமதியாளர்களில் 17 பேரில் 6 பேர் வரி செலுத்தியுள்ளனர். அத்துடன் தண்டப்பணம் அறவிடல் கூடாக மாத்திரம் சுங்கத் திணைக்களம் இந்த ஆண்டு மாத்திரம் 1,000 கோடி ரூபாவை மேலதிகமாக திரட்டியுள்ளது என்றார்.

# ஜனாதிபதியிடம் பிரகடனம் கையளிப்பு

வரலாற்று சிறப்பு மிக்க கண்டி தலதா மாளிகையின் எசல பெரஹெரா சிறப்பாக நிறைவுள்ளதாக அறிவிக்கும் பிரகடனத்தை, தலதா மாளிகையின் தியவடன நிலமே பிரதீப் நிலங்க தேலவினால் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவிடம் செவ்வாய்க்கிழமை (20) கையளிக்கப்பட்டது.















# வழங்கவும் இல்லை; சிபாரிசும் இல்லை



நான் எந்தவொரு நபருக்கும் மது வரி அனுமதிப் பத்திரம் வழங்கவில்லை அல்லது யாருடைய பெயரையும் வழங்க சிபாரிசு செய்யவில்லை என அரச தரப்பின் பிரதம கொறடாவும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சருமான பிரசன்ன ரணதுங்க தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் புதன்கிழமை(21) சிறப்புரிமைப் பிரச்சினையை முன் வைத்தே இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறுகையில்,

ஊடகங்களில் வெளியான தவறான தகவலைத் திருத்துவதற்கு எனக்கு சந்தர்ப்பம் வழங்கியமைக்கு நன்றி. இந்த தவறான தகவலை ஊடகங்கள் மட்டும் அல்ல, காலை நாளிதழ்கள் குறித்து தகவல் கொடுத்த ஊடக நிறுவனங்களும் இந்த தவறான தகவலை அடிப்படையாக வைத்து பேசியிருந்தன. நிகழ்ச்சியை வழங்கும் அறிவிப்பாளர்கள் தகவல் தவறாக இருந்தால் திருத்திக் கொள்ளுமாறு கேட்டுக் கொண்டனர்.

அண்மையில் இடம்பெற்ற அரசியல் கூட்டமொன்றில் மது வரி அனுமதிப்பத்திரம் பெற்ற பலரது பெயர்களை தயாசிறி ஜயசேகர எம்.பி குறிப்பிட்டுள்ளார். ஒருவருக்கு நான் கலால் அனுமதிப் பத்திரம் கொடுத்ததாகவும் கூறினார்.நான் யாருக்கும் மது வரி உரிமம் வழங்கவுமில்லை. அதற்காக யாருடைய பெயரையும் பரிந்துரைக்கவுமில்லை. அரசியல் வாதிகளுக்கு மது வரி உரிமம் வழங்கப்பட்டதாகக் கூறி அரசியல் ஆதாயம் அடைய எதிர்க்கட்சிகள் தவறான சித்தாந்தத்தை வளர்த்து என்றார்.



# ஜெயந்த டி சில்வா காலமானார்



மேல் மாகாண சபையின் முன்னாள் உறுப்பினரும், பிரக்ஞா பிரதீப அமைப்பின் ஸ்தாபகருமான ஜெயந்த டி சில்வா புதன்கிழமை (21) காலமானார். இறக்கும் போது அவருக்கு வயது 78 ஆகும்.

இவர் ஐக்கிய தேசியக் கட்சியின் பொரளை தொகுதியின் அமைப்பாளராகவும் பணியாற்றியுள்ளார். அன்னாரின் இறுதிச் சடங்குகள் தொடர்பாகப் பின்னர் அறிவிக்கப்படும்.

# காதல் ஜோடியிடம் கப்பம்: 2 பொலிஸார் நீக்கம்

கடுவெல பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் இரண்டு கான்ஸ்டபிள்கள் ரூபாய் 10,000 இலஞ்சமாகப் பெற முயன்ற குற்றச்சாட்டின் பேரில் பணியிடை நீக்கம் செய்யப்பட்டதாக நுகேகொட பிரதேச சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

கான்ஸ்டபிள்கள் இருவரும் 14ஆம் திகதி மாலை 6 மணி முதல் அடுத்த நாள் 6 மணி வரை மோட்டார் சைக்கிளில் பயணித்து சோதனை நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர்.

இதன் போது முல்லேரிய பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சந்திரிகா குமாரதுங்க வீதியில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த காரை சோதனையிட்டுள்ளதுடன் காரில் இருந்த காதல் ஜோடி அநாகரீகமாக நடந்து கொள்வதாகத் தகவல் கிடைத்தது என கூறி அச்சுறுத்தி அவர்களிடமிருந்து இலஞ்சம் பெற முயன்றுள்ளதாக பொலிஸ் விசாரணைகளின் போது தெரியவந்துள்ளது.

மேலும் இது தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# மாமியாரைக் கொன்றவர் கைது

வாக்குவாதத்தின் போது தனது மாமியாரைக் கொலை செய்து மனைவி மற்றும் மகளைக் கூரிய ஆயுதத்தால் தாக்கி அவர்களுக்குப் பலத்த காயங்களை ஏற்படுத்திய குற்றச்சாட்டில் 44 வயதுடைய நபர் ஒருவர் கலபிடமடை லெவங்கம பிரதேசத்தில் செவ்வாய்க்கிழமை (20) மாலை கைது செய்யப்பட்டுள்ளார்.

55 வயதுடைய மாமியார் கரவனெல்ல வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளார்.

சம்பவம் தொடர்பில் 44 வயதுடைய சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளதுடன், கலபிடமடை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# சுகாதாரத்துறைக்கு வடக்கு ஆளுநர் பணிப்புரை

எஸ்.தில்லைநாதன்

வடக்கு மாகாணத்தில் உள்ள அனைத்து வைத்தியசாலைகள் மற்றும் அரச மருந்தகங்களில் முன்னெடுக்கப்படும் சேவைகள் தொடர்பான தகவல் அடங்கிய பாதாதைகள் காட்சிப்படுத்தப்பட வேண்டும் என வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம்.சார்ள்ஸ் மாகாண சுகாதார அமைச்சுக்குப் பணிப்புரை விடுத்துள்ளார்.

நோயாளர்களுக்கு வழங்கப்படும் சேவைகள், நோயாளர்களும், வைத்தியர்களும் பின்பற்ற வேண்டிய நடைமுறைகள், சேவையை பெற்றுக் கொள்வதில் தாமதம் அல்லது சிக்கல்கள் ஏற்பட்டால் தொடர்பு கொள்ள வேண்டிய உயர் அதிகாரிகளின் தொடர்பு இலக்கங்கள் ஆகியன குறித்த பதாதையில் காட்சிப்படுத்தப்பட வேண்டும் எனவும் அவர் அறிவுறுத்தியுள்ளார்.

மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர், மாவட்ட, பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆகியோரின் தொலைபேசி இலக்கங்கள், ஆளுநரின் நேரடி கண்காணிப்பின் கீழ் இயங்கும் ‘அபயம்’ பிரிவின் தொலைபேசி இலக்கங்கள் அறிவித்தல் பதாதையில் கட்டாயம் குறிப்பிடப்பட வேண்டும் எனவும் பொதுமக்களிடம் இருந்து கிடைக்கும் முறைப்பாடுகள் தொடர்பில் துரித நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் எனவும் சுகாதாரத்துறை உயர் அதிகாரிகளுக்கு வடக்கு மாகாண ஆளுநர் கூறியுள்ளார்.

நோயாளர்களின் உரிமைகளைப் பாதுகாப்பதோடு, அவர்களுக்கான சேவையை உறுதிப்படுத்தச் சுகாதார துறையினர் மேலும் அர்ப்பணிப்போடு செயற்பட வேண்டும் எனவும் வடக்கு மாகாண ஆளுநர் சுட்டிக்காட்டியுள்ளார்.



# பெண்ணின் சடலத்தை தோண்ட நடவடிக்கை

ஆ.ரமேஸ்

நுவரெலியா - ஹங்குராங்கெத்த, கோனப்பிட்டிய, சீனாக்கொலை தோட்டத்தில் புதைக்கப்பட்டுள்ள பெண் ஒருவரின் சடலத்தை தோண்டி எடுக்க நடவடிக்கை எடுத்துள்ளதாக மந்தாரநுவர பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இவ்வாறு புதைக்கப்பட்டுள்ள பெண்ணின் சடலம் புதன்கிழமை (21) காலை தோண்டியெடுக்கப்பட்டதாக பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

கோனப்பிட்டிய பிரதேச வைத்தியசாலைக்குத் தாதியாகச் சேவையாற்ற அக்கரப்பத்தனை பிரதேசத்தில் இருந்து வருகை தந்திருந்த பெண், கடந்த ஆறு மாதங்களாகக் காணாமல் போயுள்ளதாக மந்தாரநுவர பொலிஸாருக்கு முறைப்பாடு கிடைத்துள்ளது.

அதனடிப்படையில், தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில், காணாமல்போன பெண் கோனப்பிட்டிய, சீனாக்கொலை தோட்ட பகுதியில் புதைக்கப்பட்டுள்ளதாக விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

இது தொடர்பாக வலப்பனை நீதவான் நீதிமன்றத்திற்கும் அறிவிக்கப்பட்டுள்ள நிலையில், நீதவானின் உத்தரவுக்கு



அமைய, சடலத்தை தோண்டி எடுப்பதற்கு நடவடிக்கை எடுத்துள்ளதாகவும், சம்பவம் தொடர்பில் நுவரெலியா மாவட்ட இரசாயன தடயவியல் புலனாய்வு பொலிஸாரும் சம்பவ இடத்திற்கு வரவழைக்கப்பட்டிருப்பதாகவும் மந்தாரநுவர பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மேலும், சம்பவத்துடன் தொடர்புபட்டுள்ள சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் அவர்களை விசாரணை செய்ததில் கிடைக்கப்பெற்ற தகவலுக்கு அமைவாக சந்தேகநபர்கள் அடையாளப்படுத்திய இடத்தில் சடலம் இருப்பதாகக் கண்டறியப்பட்டதாகவும் தோண்டப்படுவதாகவும் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

# கடைக்கு சென்றவர் சடலமாக மீட்பு

கிண்ணியா பொலிஸ் பிரிவுக்குட்பட்ட, ஆலாங்கேணி பிரதேசத்தையும் பைசல் நகர் பிரதேசத்தையும் இணைக்கின்ற பாலத்தடியில் இருந்து ஆண் ஒருவரின் சடலம் செவ்வாய்க்கிழமை(20) இரவு மீட்கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கிண்ணியா, மஹரூப் நகர், 3ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த ஐந்து பிள்ளைகளின் தந்தையான 60 வயதுடைய முஹம்மது லெப்பை முபாரக் என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

குறித்த நபர் செவ்வாய்க்கிழமை(20) மாலை 5 மணி அளவில் கடைக்கு செல்வதாக மனைவியிடம் கூறி வெளியே சென்றுள்ளதுடன், இரவு 7 மணி அளவில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.



# வானில் மிதந்து காத்தாடியாகி மரணிக்கும் ‘குஷ்’க்கள்

உணவுத் தட்டுப்பாட்டைத் தடுக்கவும் கொரோனா காலத்தில் மரக்கறிகளைத் தேடி வீடுகளிலிருந்து வெளியேறாமல் இருப்பதற்காகவும், வீட்டுத் தோட்டக்கலையை அரசாங்கம் ஊக்குவித்தது. அதில், தங்களை அர்ப்பணித்தவர்கள், இன்னும் பயிரிட்டுக்கொண்டுதான் இருக்கின்றனர். பலரும் கைவிட்டுவிட்டனர். எனினும், மரக்கறிகளின் விலை உயரும்போது, ‘பழைய குருடி கதவைத் திறவடி’ என்பதற்கு இணங்க மண்ணை பதப்படுத்துவர்.

தோட்டத்திலும் தொட்டிகளிலும் வளர்க்கக்கூடிய மரக்கறி செடிகளை வளர்க்கவே அரச திணைக்களங்கள் ஊக்கமளித்தன. எனினும், அதனைத் தவறாகப் பயன்படுத்தும் சிலர், தங்களுடைய இரண்டு மாடி வீடொன்றில் வீட்டுக்குள் ‘குஷ்’ எனும் செடியை நட்டுள்ளனர்.

‘குஷ்’ ஒரு போதைப்பொருளாகும். கஞ்சா சுருட்டுகளைத் தயாரிப்பது போல், புகையிலை அல்லது காகிதத்தில் சுற்றி வைத்துப் புகைபிடிக்கலாம். ‘குஷ்’ புகையைச் சிறிது நேரம் உள்ளிழுப்பவர் மயக்கமடைந்து வானில் மிதக்கத் தொடங்குகிறார்.

‘குஷ்’ புகையை இழுப்பவர் குறைந்த பட்சம், கத்தியை எடுத்து கைகால்களை அறுத்து, அவற்றிலிருந்து வழியும் இரத்தத்தைப் பார்த்து வேடிக்கை பார்க்கிறார். இந்த சுருட்டு எவ்வளவு அதிகமாகப் புகைக்கப்படுகிறதோ, அவ்வளவு அதிகமாக நரம்புகள் அழிக்கப்படுகின்றன.

இரண்டு அல்லது மூன்று வருட ‘குஷ்’ஷிற்கு அடிமையானவர்கள் எலும்பும் தோலும் மட்டும் எஞ்சியிருக்கும் காத்தாடி போன்று பார்க்கலாம். அதன் பிறகு, அவர் மேலும் மோசமடைந்து விரைவில் இறந்து விடுகிறார். இது ஒட்டுமொத்த சமுதாயத்திற்கும் நன்மை செய்யும் மரணம். அந்த மரணத்தால் சமுதாயம் சோகமாக இருக்கக்கூடாது.

மாலம்பே, கஹந்தோட்டையின் இருமாடி வீட்டின் குளிர் அறையில் ‘குஷ்’ செடிகள் நடப்பட்டன. அங்கு 200 செடிகள் இருந்தன. 1 கிராம் ‘குஷ்’ 5,000 ரூபாய். கஹந்தோட்டை குடும்பத்தினரால் தினமும் சுமார் 300 கிராம் ‘குஷ்’ சந்தைக்கு அனுப்பப்பட்டது. அந்த செடிகளின் விதைகளைப் பின்லாந்தில் இருந்து கொண்டு வந்தனர். ஒரு நாளைக்கு 5,000 ரூபாய் மதிப்புள்ள 300 கிராம் ‘குஷ்’ உற்பத்தி செய்பவர் ஒரு வாரத்தில் கோடீஸ்வரராக மாறுகிறார்.

‘குஷ்’ என்பது கஞ்சாவின் ஒரு திரிபு. இது ஹைப்ரிட் கஞ்சா என்று அழைக்கப்படுகிறது. இது சமீபத்தில் விவசாயத் தொழில்நுட்பத்தால் தயாரிக்கப்பட்ட தாவர இனம் என்று சொல்ல வேண்டும். பல்வேறு வகையான ‘குஷ்’கள் உள்ளன, அவற்றில் மிகவும் விலையுயர்ந்த தாவரம் OG ‘குஷ்’ ஆகும்.

‘குஷ்’ ஆலை இந்தியாவில் இந்து ‘குஷ்’ மலைத்தொடரில் பரவலாக வளர்கிறது மற்றும் 1970களில் ஆப்கானிஸ்தான், பாகிஸ்தான் மற்றும் இந்தியாவில் வாழும் கஞ்சா வணிகர்களால் கண்டுபிடிக்கப்பட்டது. பின்னர் ஆலை அமெரிக்காவிற்குக் கொண்டு செல்லப்பட்டு கலப்பினமாக்கப்பட்டது.

கஞ்சா சாகுபடியை ஒரு தோட்டக் கலையாக ஊக்குவிக்கும் பிரச்சாரம் பல ஆண்டுகளாக இலங்கை முழுவதும் பரவி வருகிறது. ஐந்து விதிகளின்படி போதைப்பொருள் பாவனை பாவமாகும். இனப்பெருக்கத்திற்குப் பயன்படுத்தினால் தீமை வருமா என்பது விளக்கப்படவில்லை.

கொல்லைப்புறத்தில் கஞ்சா வளர்ப்பதும், வீட்டின் பின்புறம் கசிப்பு காய்ச்சுவதும் இந்நாட்டில் சகஜம். மதுவின் விலை மிக அதிகமாக இருப்பதால் குடிகாரர்கள் கசிப்புவின் மீது ஈர்க்கின்றனர். கொரோனா காலத்தில் வீட்டில் கசிப்பு காய்ச்சுவது மிகவும் பொதுவானது. புகைப்பிடிப்பவரின் நுரையீரல் அழுகும். கசிப்பு அடிப்பவரின் கல்லீரல் அழுகும். கஞ்சா புகைப்பவரின் தலை சேதமடையும். இந்தக் கதைகள் அனைத்தின் இறுதி முடிவும் இதுதான்.

தமிழ்Mirror www.tamilmirror.lk க்கு எழுதுங்கள்


தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருத்துக்களையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk






## வாழ்வியல் தரிசனம்

எடுத்தெறிந்து பேசுவது மமதையின் வெளிப்பாடு என்றே சொல்ல வேண்டும். விதண்டாவாதத்துடன் எவருக்கும் பணியாமல், தாங்கள் சொல்வது மட்டுமே சரியானது எனப் பேசுபவர்களை, எவருமே விரும்பமாட்டார்கள்.

எமது நடை, உடை, பாவனை, பேசும் முறை போன்றவற்றை, சுற்றி இருப்பவர்கள், எப்பொழுதும் அவதானித்துக் கொண்டே இருப்பார்கள். கண்ணியமாக நடந்து கொள்வபர்களேயே சமூகம் விரும்புகின்றது.

எவ்வளவு பெரும் அந்தஸ்தும் கல்விப் புலமையும் இருப்பவர்களின் நடத்தையிலும் குணத்திலும் கோணல் புத்தி இருந்தால், அவர்களிடம் இருந்து மற்றையோர் விலகிப்போய் விடுவார்கள்.

நெஞ்சத்தில் மாசு இன்றி, கலகலப்பாக, நகைச்சுவை உணர்வோடு, ஆணவச் செருக்கு அற்றவர்களை, விரும்பாதவர்கள் எவருமே இல்லை.

வெறுப்பு குரோதங்களை வளர்ப்பது சுலபமானது. சாந்தம், அமைதி, எளிமையுடன் வாழ்வதற்கு, ஆன்ம சுத்தி அவசியமானது. இதற்கு மனோ சக்தி பிரதானமானது.

நல்லன எதுவெனப் பலருக்கும் தெரியும். ஆனால், அவற்றைக் கடைப்பிடிக்க முயற்சி செய்ய வேண்டும். இது சிரமமானது அல்ல!

-பருத்தியூர் பால. வயிரவநாதன்

# திருத்தத்தை யாரும் விரும்பவில்லை

முருகானந்தம் தவம்

இலங்கையின் 9ஆவது நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியை தெரிவு செய்வதற்கான தேர்தல் எதிர்வரும் செப்டெம்பர் மாதம் 21ஆம் திகதி சனிக்கிழமை நடைபெற உள்ள நிலையில், ஜனாதிபதி கதிரையைக் கைப்பற்றுவதற்கு இம்முறை பலமுனை போட்டி ஏற்பட்டுள்ளதுடன், பிரபல வேட்பாளர்கள் பலர் களமிறங்கியுள்ளதால் தேர்தல் களம் எதிர்வு கூற முடியாதளவுக்கு குழம்பிப் போயுள்ளது.

இந்த ஜனாதிபதித் தேர்தலில் 40 வேட்பாளர்கள் கட்டுப்பணம் செலுத்தினர். அதன்படி, அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகள் சார்பாக 22 வேட்பாளர்களுக்காகவும், வேறு அரசியல் கட்சி சார்பாக ஒரு வேட்பாளருக்காகவும் மற்றும் சுயேச்சையாக 17 வேட்பாளர்களுக்காகவும் கட்டுப்பணங்கள் செலுத்தப்பட்டன. ஆனால், 39 வேட்பாளர்களே வேட்புமனு தாக்கல் செய்துள்ளனர்.இதன் மூலம் இலங்கையின் ஜனாதிபதி தேர்தல் வரலாற்றில் அதி கூடிய வேட்பாளர்கள் போட்டியிடும் ஜனாதிபதித் தேர்தலாகவும் அதி கூடிய செலவினத்தைக் கொண்ட ஜனாதிபதித் தேர்தலாக இந்த தேர்தல் வரலாற்றில் இடம் பிடித்துள்ளது.

இலங்கையில் 1978 நிறைவேற்றப்பட்ட அரசியலமைப்பின் பிரகாரம், கொண்டு வரப்பட்ட நிறைவேற்று அதிகார ஜனாதிபதிகளைத் தெரிவு செய்வதற்காக இதுவரை 8 ஜனாதிபதித் தேர்தல்கள் நடத்தப்பட்டுள்ளன. இதில் நிறைவேற்று அதிகார ஜனாதிபதியைத் தெரிவு செய்வதற்கான எட்டாவது தேர்தல் 2019-11-16ஆம் திகதி நடைபெற்ற நிலையில், இதில் ஜனாதிபதி வேட்பாளர்களாக ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவில் இருந்து பாதுகாப்பு அமைச்சின் முன்னாள் செயலாளர் கோட்டாபய ராஜபக்‌ஷபுதிய ஜனநாயகக் கட்சியிலிருந்து சஜித் பிரேமதாச, தேசிய மக்கள் சக்தியிலிருந்து அனுரகுமார திசாநாயக்க உள்ளிட்ட 35 வேட்பாளர்கள் களமிறங்கினர். இதுவே இதுவரை அதிக வேட்பாளர்கள் போட்டியிட்ட ஜனாதிபதித் தேர்தலாக இருந்த நிலையில், அந்த சாதனையை எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தல் வேட்பாளர்கள் முறியடித்துள்ளனர்.

இவ்வாறு தற்போது நடைபெறவுள்ள ஜனாதிபதி தேர்தலில் 39 வேட்பாளர்கள் களமிறங்கி புதிய சாதனை படைத்துள்ளதுடன் தேர்தல்கள் திணைக்களத்துக்கு அதிக செலவையும் ஏற்படுத்தியுள்ளனர் . அதன்படி, ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க சுயேச்சை வேட்பாளராகவும் ஐக்கிய மக்கள் சக்தியின் வேட்பாளராக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவும், தேசிய மக்கள் சக்தியின் வேட்பாளராக அனுரகுமார திஸாநாயக்கவும், ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் வேட்பாளராக நாமல் ராஜபக்‌ஷவும் வேட்பு மனுக்களைத் தாக்கல் செய்தனர்.

இதேவேளை, அபிநவ நிவஹல் பெரமுன வேட்பாளராக ஓசல ஹேரத், இலங்கை தொழிலாளர் கட்சி வேட்பாளராக ஏ.எஸ்.பி.லியனகே, தேசிய அபிவிருத்தி முன்னணி வேட்பாளராக எஸ்.கே.கே பண்டாரநாயக்க ஆகியோர் வேட்பு மனுக்களைத் தாக்கல் செய்திருந்தனர்.

இதேவேளை, தேசிய ஜனநாயக முன்னணி வேட்பாளராக விஜேதாச ராஜபக்‌ஷ, ஐக்கிய சோஷலிச கட்சி வேட்பாளராக சிறிதுங்க ஜயசூரிய, ருகுணு மக்கள் கட்சி வேட்பாளராக அஜந்த டி சொய்சா, நவ சிஹல உறுமய வேட்பாளராக சரத் மனமேந்திர, ஜனசெத பெரமுன வேட்பாளராக சீலரட்ண தேரர், அருணலு ஜனதா பெரமுன வேட்பாளராக கே.ஆர்.கிசான், சோசலிச சமத்துவ கட்சி வேட்பாளராக பானி விஜேவர்தன, நவ சமசமாஜ கட்சி வேட்பாளராக பிரியந்த புஸ்பகுமார, சிறிலங்கா சோசலிச கட்சி வேட்பாளராக மஹிந்த தேவகே, ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணி வேட்பாளராக அனோஜ் டி சில்வா, ஐக்கிய ஜனநாயக கூட்டணி வேட்பாளராக அபூபக்கர் மொஹமட் இன்பாஸ், இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி வேட்பாளராக திலித் சுசந்த ஜயவீர, சோசலிச மக்கள் அமைப்பின் வேட்பாளராக நுவான் போபகே, சமவிம கட்சி வேட்பாளராக லக்‌ஷ்மன் நாமல் ராஜபக்‌ஷ, ஐக்கிய இலங்கை பொதுஜன கட்சி வேட்பாளராக ஜானக ரத்நாயக்க மற்றும் ஐக்கிய தேசிய சுதந்திர முன்னணி வேட்பாளராக லலித் டி சில்வா ஆகியோர் வேட்பு மனுக்களைத் தாக்கல் செய்தனர்.

மேலும், சரத் பொன்சேகா, சரத் கீர்த்தி ரத்ன, கே.கே.பியதாச, கே.ஆனந்த குலரத்ன, அக்மீமன தயாரத்ன தேரர், சிறிபால அமரசிங்க, விக்டர் பெரேரா, மொஹமட் இலியாஸ், மரக்கல மானகே பிரேமசிறி, சிட்னி ஜயரத்ன, டீ.எம்.பண்டாரநாயக்க, எம்.திலகராஜ், ரொஷான் ரணசிங்க, பா.அரியநேந்திரன், சமிந்த அனுருத்த ஆகியோர் சுயேச்சை வேட்பாளர்களாக மனுத் தாக்கல் செய்தனர். இவர்களே தேர்தல் திணைக்களத்துக்கு அதிக செலவினத்தை ஏற்படுத்தியுள்ளனர்.

தேர்தல்கள் ஆணைக்குழுவின் உத்தியோகபூர்வ தகவல்களின் பிரகாரம்,கடந்த 2005 ஜனாதிபதித் தேர்தலின் மொத்த செலவு 72 கோடி ரூபாவாகும். அப்போது ஒரு வாக்காளருக்குச் செலவிடப்பட்ட தொகை 54 ரூபாவாகும். 2010 ஜனாதிபதித் தேர்தலுக்காக 185கோடி ரூபாவை தேர்தல்கள் திணைக்களம் செலவிட்டது. 2015 ஜனாதிபதித் தேர்தலுக்காக 270 கோடி ரூபாவை செலவிட்ட நிலையில் ஒரு வாக்காளருக்கு 180 ரூபாய் செலவிடப்பட்டது.

கடந்த 2019 நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலுக்கான மொத்த செலவு 550 கோடி ரூபாய் எனவும் அதனடிப்படையில், ஒரு வாக்காளருக்காகத் தேர்தல்கள் திணைக்களத்தால் 344 ரூபாய் செலவிடப்பட்டதாகவும் மதிப்பீடு செய்யப்பட்டது. ஆனால், இம்முறை தேர்தலுக்கான செலவு தேர்தல் திணைக்களத்துக்கு பாரியளவில் அதிகரித்துள்ளது.

எதிர்வரும் செப்டெம்பர் 21ஆம் திகதி நடத்தப்படவுள்ள ஜனாதிபதித் தேர்தலுக்காக 1,000 கோடி ரூபாவை செலவிடுவதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளதுடன், வேட்பாளர்கள் அதிகரிப்பினால் ஏற்படும் செலவினங்கள் காரணமாக மேலதிகமாக இரண்டு மில்லியன் ரூபாய் செலவாகலாம் என தேர்தல் ஆணையாளர் நாயகம் சமன் ஸ்ரீ ரத்நாயக்க தெரிவித்துள்ளார். அத்துடன், தேர்தலில் ஒருவரே வெற்றி பெறுவார். எனினும், தேவையற்ற விதத்தில் பெருமளவிலானோர் வேட்பாளர்களாக களமிறங்குவதனால் செலவுகளே அதிகரிக்கும் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

2024 ஜனாதிபதித் தேர்தல் வாக்காளர் எண்ணிக்கை 17,140,354 உள்ள நிலையில் தேர்தல் திணைக்களம் வாக்காளர் ஒருவருக்கு 1714 ரூபாவை செலவிட வேண்டி ஏற்பட்டுள்ளது. 2019 வாக்காளர் ஒருவருக்கு 344 ரூபா செலவிடப்பட்டுள்ள நிலையில், தற்போது 6 மடங்கு வரையில் அதிகரித்த செலவினம் ஏற்பட்டுள்ளது.

இவ்வாறான அதிகரித்த செலவினத்தைக் கட்டுப்படுத்த வேண்டும். அரசியல் சுய இலாபங்களுக்காக ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களின் எண்ணிக்கை ஒவ்வொரு முறையும் அதிகரித்து வருகிறது. எனவே, ஏதோவொரு வகையில் தேவையற்று, பெயர் புகழுக்காகப் போட்டியிடும் வேட்பாளர்களின் எண்ணிக்கையைக் குறைக்க வேண்டும். இவர்கள் தேவையற்ற வகையில் போட்டியிடுவதனால் இவ்வாறானவர்களுக்காகவும் மக்களின் வரிப்பணம் வீணடிக்கப்படுகிறது என்ற எதிர்ப்புக் குரல்களும் எழுந்துள்ளன.

1981 ஆம் ஆண்டு 15ஆம் இலக்க தேர்தல் சட்டத்திற்கு அமைய அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சி வேட்பாளரிடம் இருந்து 50 ஆயிரம் ரூபாய் கட்டுப்பணமும், சுயாதீன வேட்பாளரிடம் இருந்து 75 ஆயிரம் ரூபாய் கட்டுப்பணமுமே அறவிடப்படுகிறது. அதனால்தான் பெயர், புகழுக்காகவும் அரசியல் ஆதாயங்களுக்காகவும் பலர் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுகின்றனர் 2019ஆம் ஆண்டு நடந்து முடிந்த ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட்ட 35 வேட்பாளர்களில், 33 பேர் தமது கட்டுப்பணத்தை இழந்தனர்.

ஜனாதிபதி தேர்தலில் அளிக்கப்படும் மொத்த வாக்குகளில், 5 சதவீத வாக்குகளைப் பெறுபவர்கள் தமது கட்டுப்பணத்தை மீளவும் பெற்றுக்கொள்ள முடியும். அதற்கிணங்க நடந்து முடிந்த ஜனாதிபதித் தேர்தலில் பொதுஜன பெரமுன கட்சியில் போட்டியிட்டு வெற்றி பெற்ற கோட்டாபய ராஜபக்‌ஷ மற்றும் ஐக்கிய தேசியக் கட்சி சார்பாகக் களமிறங்கிய சஜித் பிரேமதாச ஆகியோர் மட்டுமே, கட்டுப்பணத்தை மீண்டும் பெறும் தகுதியைப் பெற்றனர். எனவே, எவ்விதமான வரையறைகளும் இல்லாமல் வேட்பாளர்கள் போட்டியிடுவதனால், மக்கள் பணமே வீண் விரயம் ஆக்கப்படுகிறது என்ற குற்றச்சாட்டுக்களும் முன்வைக்கப்படுகின்றன. இவ்வாறான நிலையில், ஜனாதிபதித் தேர்தலுக்கான கட்டுப்பணத்தை அதிகரிப்பது தொடர்பான யோசனைகள் பெற்றுக் கொள்ளப்பட்டதாக, தேர்தல்கள் ஆணைக்குழுவின் பிரதானி ஏ.எல்.ரத்நாயக்க தெரிவித்திருந்தார். கட்டுபணத் தொகையை அதிகரிக்க வேண்டும் என தேர்தல் கண்காணிப்பு அமைப்புக்களும் வலியுறுத்தி உள்ளதாகவும் பாராளுமன்றம், சட்ட மா அதிபர் திணைக்களம், ஏனைய பொது நிறுவனங்கள் மற்றும் தனியார்த் துறையினரின் யோசனைகளின் அடிப்படையில் இதற்கான பரிந்துரை செய்யப்பட்டுள்ளதாகவும் தேர்தல் ஆணைக்குழு தனித்து இந்த தீர்மானத்தை எடுக்கவில்லை எனவும் பொது மற்றும் சிவில் அமைப்புக்களிடமிருந்து இது தொடர்பான யோசனைகள் கோரப்பட்டதாகவும் அவர் தெரிவித்திருந்தார்.

அதற்கு வலு சேர்க்கும் வகையில், ஜனாதிபதித் தேர்தலுக்கான கட்டுப்பணத்தை திருத்தம் செய்ய வேண்டும். இதற்கமைய அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியின் வேட்பாளரின் கட்டுப்பணத்தை 25 இலட்சம் ரூபாவாகவும் சுயாதீன வேட்பாளரின் கட்டுப்பணத்தை 30 இலட்சம் ரூபாவாகவும் திருத்தம் செய்ய வேண்டும்.


அப்போது தான் போட்டியிடும் வேட்பாளர்களின் எண்ணிக்கை வரையறுக்கப்படும் என டலஸ் அழகப்பெரும எம்.பி. அண்மையில் பாராளுமன்றத்தில் வலியுறுத்தியிருந்தார்.

ஆனால், இந்த கோரிக்கையை அரசு நிராகரித்து விட்டது. இதற்குப் பதிலளித்த சபை முதல்வரும் அமைச்சருமான சுசில் பிரேமஜயந்த, ஜனாதிபதி தேர்தல் வேட்பாளர்களின் கட்டுப்பணம் தொடர்பான திருத்தத்தை இடம் பெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலை இலக்காகக் கொண்டு முன்வைக்க முடியாது.

அதற்கான காலவகாசம் போதாது. எனவே, 2029ஆம் ஆண்டு நடைபெறும் ஜனாதிபதி தேர்தலில் இவ்விடயம் குறித்து கவனம் செலுத்தலாம் என கூறிவிட்டார். ஜனாதிபதி வேட்பாளர்களுக்கான கட்டுப்பணத்தை பாரியளவில் அதிகரித்தல் குறிப்பிட்ட ஒரு வகுப்பைச் சேர்ந்த சமூகத்தினர் அரசியலில் ஈடுபடுவதை வரையறுக்கும் நோக்கில் முன்னெடுக்கப்பட முயற்சிக்கப்படுவதாக சில தரப்புக்கள் குற்றம் சுமத்தி இருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

## கடிதங்கள்

### புறக்கணிக்கிறதா?



கல்முனை மாநகர சபைக்குட்பட்ட நற்பிட்டி முனை குளப் பகுதியில் தினமும் ஆடு, மாடு மற்றும் கோழி கழிவுகள் கொட்டப்பட்டு வருகின்றமை அதிகரித்துள்ளதாகப் பொதுமக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

குறிப்பாகத் தாள வெட்டுவான் சந்தியில் இருந்து நற்பிட்டிமுனை நோக்கிச் செல்லும் இலங்கை மின்சார சபையின் பழைய வீதியின் இடப்பக்கம் உள்ள குளக்கரையில் இத்தகைய குப்பைகள் இனந்தெரியாதோரால் தினமும் கொட்டப்பட்டு வருவது.

இதனால் அப்பகுதியில் உள்ள மக்கள் வாழ முடியாதவாறு பெரிதும் அசௌகரியங்களுக்கு உள்ளாகியுள்ளனர். இதனால் அவர்களது குடும்பம் பாதிக்கப்பட்டுள்ளதுடன்,

அந்த சூழலும் பாதிக்கப்பட்டு மாசடைந்து வருகிற அதேநேரம், மக்களுக்கு நோய்களையும் உருவாகின்றன. இது தொடர்பில் பல தடவைகள் கல்முனை மாநகர சபையிடமும், பொதுச் சுகாதார பரிசோதகரிடமும் முறையிட்டும் இதுவரை எந்த நடவடிக்கைகளும் எடுக்கவில்லை என்று கூறிய மக்கள், இது தமிழர் பிரதேசம் என்பதால் இந்த பாராமுகமா? அல்லது புறக்கணிப்பா? அத்துடன், கல்முனை மாநகர சபை உடனடியாக நடவடிக்கை எடுக்குமா? அல்லது இப்படியே பார்த்துக் கொண்டே இருப்பார்களா? என்றும் கேள்வி எழுப்பியுள்ளனர்.

- அபு அலா

# “விழுமியங்களை வளர்ப்போம்”





சி.ஆர்த்திகா
2ஆம் வருடம் 1ஆம் அரையாண்டு
கல்வியியல் சிறப்புக் கற்கை மாணவி
கலை கலாசார பீடம்
கிழக்குப் பல்கலைக்கழகம்

“முற்றும் சுயநலமற்ற அன்பே உண்மை அன்பு அதுவே இறையன்பு” என்ற விவேகானந்தரின் வீர மொழியுடன் எனது கருத்தை ஆரம்பிக்கின்றேன். பண்டைய மத பாரம்பரியத்தைக் கொண்டதாக இந்து சமயம் காணப்படுகின்றது. இவ்வாறு கல்வியிலே இந்துமதம் ஆரம்ப காலத்தில் ஒழுக்கம் போற்றும் பண்பும், விழுமியத்தைக் கட்டிக் காக்கக்கூடியதும், கலாசாரம், பண்பாடு என்பவற்றை மாணவர்கள் மத்தியிலும் மக்கள் மத்தியிலும் வேரூன்றச் செய்த ஒன்றாகக் காணப்படுகிறது. ஆனால் தற்காலத்திலோ “பசிக்கு கை நீட்டிக் கேட்பவர்களுக்குச் சில்லறைக் காசு பசிக்காத கடவுளுக்கு ரூபாய் நோட்டில் அலங்காரம் செய்யும் சமூகம் இது..

“என இக்காலச் சமூகம் பற்றிப் பல கருத்துக்கள் எழுகின்றன. இறைவனுக்குச் செய்யும் மிகப்பெரிய கொடையை ஏழைகளுக்குச் செய்தால் அதுவே உயர்ந்த பண்பாகும்.

மூத்த குடியில் உள்ளவர்கள் நல்லறிவு இல்லாமல் இருந்திருக்கலாம் ஆனால் நல் பழக்கவழக்கங்களைக் கைவிட்டவர்கள் என்று ஒரு நாவும் உச்சரிக்காது. ஏன் இந்த நிலை தற்காலத்தில் வரவில்லை? என்ற பெரும் கேள்வி என்னுள் எழுகின்றது. நல்லறிவு நான்கு திசையிலும் இருக்கின்றது என்பதால் நல் பழக்கவழக்கங்கள் கைவிடப்பட்டு விட்டது. என்று எண்ணுவதா எனப் புரியவில்லை!

தற்காலத்தில் இலங்கையைப் பொறுத்தவரை விழுமியக் கல்வியை விடவும் சமயக் கல்விக்கு முன்னுரிமை வழங்கப்படுகின்றது.

ஆகவே, தான் சமய கல்வி மூலமாகவே விழுமிய கல்வி போதிக்கப்படுகின்றது. அந்த வகையில் இந்து சமயம் கூறும் விழுமிய கல்வி கற்பிக்கப்படுகின்றது. ஆனால் கடைபிடிக்கப்படுகின்றதா? என்று கேட்டால் அது கேள்விக்குறியாகவே உள்ளது.

பாடசாலையில் தற்போது கல்வி கற்பிக்கும் தகாத நடத்தையுடன் கற்பிக்கும் நிலை காணப்பட்டால் அதைத் தொடர்ந்து பேணிவரும் மாணவர்களிடத்தில் நல்ல நடத்தையை எவ்வாறு எதிர்பார்க்க முடியும்? மது அருந்துதல், புகைப்பிடித்தல் போன்ற பழக்கவழக்கங்கள் ஒரு சில ஆசிரியர்களிடத்தில் காணக்கூடியதாக உள்ளது.

உதாரணமாக - கலவனா கொடிப்பிலிகந்த பிரதேசத்தில் பதில் அதிபர், நடன ஆசிரியர் இருவரும் இரண்டு மாணவர்களை பாலியல் வன்புணர்வு செய்தமை தொடர்பாகக் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அத்துடன் முல்லைத்தீவு மாவட்டத்தில் ஆசிரியர் மாணவர்களும் சேர்ந்து பாடசாலை மாணவியை பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்தி கைது செய்யப்பட்டுள்ளனர்;.

இவ்வாறு இலங்கை தற்போது ஒரு சில பாடசாலை சூழலில் அவமதிக்கும் செயல்கள் காணப்படுகின்றன. இவை ஏனைய ஒழுக்க ரீதியான பாடசாலைகளுக்கு அவமதிப்பு ஏற்படுத்தக் கூடியதாக இருக்கும்.

பெற்றோர்கள் மத்தியில் எவ்வாறு பிள்ளைகளைப் பாடசாலைக்கு அனுப்புவது என்ற மனநிலை காணப்படும். தற்பொழுது ஆசிரியர்களை மாணவர்கள் மதிக்கின்றார்களா? என்ற வினாவிற்கு பெரும் கேள்விக்குறியிட வேண்டும்.

ஏனென்றால் ஆசிரியர்கள் மாணவர்களைத் தண்டிப்பது சட்ட ரீதியான குற்றமாகும். இதனால் மாணவர்கள் ஆசிரியர்களை அவமதிப்பான வார்த்தைகளால் பேசும் சூழ்நிலை காணப்படல்.

தற்பொழுது இலங்கையில் 10,221 பாடசாலைகளில் மேற்கொள்ளப்பட்ட போதைப்பொருள் சோதனைகளில் 4,983 பாடசாலைகளில் போதைப்பொருள் பாவனையில் மாணவர்கள் ஈடுபட்டுள்ளனர் என்று தெரியவந்துள்ளது.

இத்தகைய தகாத பழக்க வழக்கங்களை மாணவர்கள் பின்பற்றுவதற்குக் காரணம் நடத்தை தவறான ஆசிரியர்களும், தொழில்நுட்ப வளர்ச்சியில் மாணவர்கள் அடிமைப்பட்டு விட்டனர். என்பதே காரணமாகக் கருதுகின்றேன்.

விழுமிய கல்வியைப் பற்றி அறியாதவர்களே இவ்வாறான நடத்தை ஈடுபடுகின்றனர் என்று கருத முடியுமா? ஏனெனில் பாடசாலையில் விழுமியக் கல்வி சமயங்கள் ஊடாக போதிக்கப்படுகின்றது.

ஒரு ஆசிரியர் கண்டிப்பதும் தண்டிப்பதும் ஒரு மாணவனுக்கு வழங்கினால் இச்செயல் நடைபெறுமா? பாடசாலையில் போதைப் பொருளை உட்கொண்டு வர மனம் வருமா? ஆசிரியர் தெரிந்தால் தண்டிப்பார் என்ற பயமே ஏற்படும். இதனால்தான் 2023.12.5 அன்று மைத்திரிபால சிறிசேனா மாணவர்களைத் தண்டிக்க முடியாத நிலையில் ஆசிரியர்கள் உள்ளனர் என்று பாராளுமன்றத்தில் வலியுறுத்தி இருக்கின்றார்.

முந்தைய கால சைவ சமயத்தவர்களுக்கு எவ்வாறு குருகுல கல்வி முறை உள்ளதோ! தற்காலத்தில் அறநெறி வகுப்புகளைக் கருதலாம்.

இந்த வகுப்புகளில் மாணவர்கள் விரும்பினால் மாத்திரம் ஞாயிற்றுக்கிழமையில் கலாசார ஆடையுடன் கல்வி பயிலலாம்.

இவை ஏன் விரும்பினால் மாத்திரம் செல்லலாம் என்று மாணவர்களிடையே போதிக்கப்படுகின்றது. விழுமிய கல்வி மாணவர்களுக்கு அவசியம் எனும் பொழுது அதை ஏன் கட்டாயமாக்கப்படவில்லை? என்று சிந்தித்துள்ளீர்களா? ஏனெனில், பாடசாலையானது பரீட்சை மையக் கல்வியில் இயங்கும் ஒன்றாகவும் ஒரு நாளில் ஆறு மணித்தியாலங்களில் கல்வியுடன் கூடிய ஒழுக்கத்தையும் கற்பிக்கும் ஒரு கூடமாகக் காணப்படுகின்றது.

ஏனைய விடுமுறை நாட்கள் மற்றும் ஏனைய நேரங்களில் மாணவர்களுக்கு நல் பழக்கவழக்கங்களைப் பெற்றோர்களும் வழங்க வேண்டும்.

பெற்றோர்கள் ஒரு பிள்ளையின் நடத்தையைக் கண்காணித்து தவறான வழியில் செல்லும்போது அவர்களின் நல்வழிப்படுத்துவது அவர்களின் கடமையாகும்.

தற்காலத்தில் பெற்றோர்கள் பொருளாதாரத்தை ஈட்டும் நோக்கில் பிள்ளையைக் கண்காணிக்காத சூழ்நிலை நிகழ்கின்றது.

இன்றைய தொழில்நுட்ப வளர்ச்சியின் காரணமாக சமூக வலைத்தளங்களை அதிகமானோர் பயன்படுத்துகின்றனர். இதன் காரணமாக பாலியல் உறவுகள், கருக்கலைப்பு, சிசுக்கொலை என்பன அதிகரித்து விழுமியங்கள் சிதைந்துள்ளதைக் காணமுடிகின்றது.

இலங்கையில் 96 விதமானோர் பாலியல் காட்சிகளைப் பார்ப்பதற்கும், பிறரின் குற்றங்களைப் பகிர்வதற்குமே சமூக வலைத்தளங்களைப் பாவிப்பதாக ஆய்வுகள் கூறுகின்றது.

அந்த வகையில், சிறுவர்களுக்கு தொலைபேசி வழங்கும் போது அவர்கள் என்ன செய்கின்றார்கள் என்பதே கண்காணிக்காது விடுவதால்தான்

> “இன்றைய தொழில்நுட்ப வளர்ச்சியின் காரணமாக சமூக வலைத்தளங்களை அதிகமானோர் பயன்படுத்துகின்றனர். இதன் காரணமாக பாலியல் உறவுகள், கருக்கலைப்பு, சிசுக்கொலை என்பன அதிகரித்து விழுமியங்கள் சிதைந்துள்ளதைக் காணமுடிகின்றது

> “பெற்றோர்கள் மற்றும் ஆசிரியர்கள் இந்து சமயத்தில் உள்ள நாயன்மார்கள் போன்றோர்களது பொன்மொழிகளையும் வாழ்க்கை முறையையும், பாசுரங்களையும் தெளிவுபடுத்தி அவர்களை முன்மாதிரியாகவைத்து வாழ வேண்டும் என வழிப்படுத்த வேண்டும்

> “பல்லின கலாசாரம் கொண்ட நாடாக இலங்கை காணப்படுவதால் அதில் ஒன்றான இந்து மதம் சார்பான கல்வியை நான் அறியத் தந்து, நவீன காலத்தில் விழுமிய கல்வியானது பாடசாலை சூழலிலும், சமூகத்திலும் காணப்பட வேண்டும்

பிள்ளைகள் ஒழுக்கத்துக்குப் புறம்பான நடத்தைகளை வெளிக்காட்டுகின்றனர்.

இவர்களைக் கண்காணிப்பது பெற்றோர்களே ஆவார். அது மட்டுமல்லாமல் பெற்றோரின் குடும்பச் சூழ்நிலையும் அச்சிறுவர்களைத் தகாத நடத்தை உடையவர்களாக மாற்றலாம்.

எனவே பெற்றோர்கள் மற்றும் ஆசிரியர்கள் இந்து சமயத்தில் உள்ள நாயன்மார்கள் போன்றோர்களது பொன்மொழிகளையும் வாழ்க்கை முறையையும், பாசுரங்களையும் தெளிவுபடுத்தி அவர்களை முன்மாதிரியாகவைத்து வாழ வேண்டும் என வழிப்படுத்த வேண்டும்.

பெரியார்கள் மாதிரியான ஒப்பனைகளை மாணவர்களுக்கு அளித்து அவர்களது கருத்துக்களை மாணவர்கள் நடித்துக் காட்டக்கூடிய செயற்பாடுகளை மாணவர்களுக்கு அளித்தல். இத்தகைய நற்குணங்கள் மாணவர்கள் மத்தியில் மிளிர வேண்டும் என்பதற்காகத்தான் கல்வித் திட்டத்தில் எல்லா மதம் சார்ந்த


பாடநெறி உட்பகுத்தப்பட்டு 1-11ஆம் தரம் வரை கட்டாய பாடமாகப் பாடசாலைகளில் பயிற்றப்பட்டு வருவது எம்மால் அவதானிக்கக் கூடியதாக உள்ளது. ஏனெனில், மாணவர்களே நாளைய தலைவர்களாக இவ்வுலகில் ஆளப்படலாம்.

அவர்களைப் பாடசாலையில் நல்வழிப்படுத்தி விழுமிய கல்வியை வழங்குவது அவசியமாக உள்ளது. பல்லின கலாசாரம் கொண்ட நாடாக இலங்கை காணப்படுவதால் அதில் ஒன்றான இந்து மதம் சார்பான கல்வியை நான் அறியத் தந்து, நவீன காலத்தில் விழுமிய கல்வியானது பாடசாலை சூழலிலும், சமூகத்திலும் காணப்பட வேண்டும். ஒரு மாணவரின் குடும்பச் சூழல் அவர்களைத் தவறான பாதையில் வழிநடத்தலாம் நடத்தைகள் தவறானதாக இருக்கலாம்.

ஆனால், பாடசாலையில் அம்மாணவர் நுழையும் போது அம்மாணவருக்கு சைவ நெறி மூலமாக நன்னடத்தையை வழங்கலாம். அம் மாணவரே ஒரு ஆசிரியர் திருத்தலாம் என்பதற்காகவும் எல்லோருக்கும் விழுமியப் பண்புகள் அவசியமாக இருக்க வேண்டும்.

என்பதனாலே பாடசாலையில் விழுமிய பண்பு போதிக்கப்படுகின்றது. இந்து மத கலாசாரம், பண்பாடு அடுத்த தலைமுறைக்கு கல்வி மூலமே எடுத்துச் செல்லலாம். மதங்கள் கூறும் நற்கருத்தை மாத்திரம் உள்வாங்கி சமூகத்தில்

நட்பிரஜையாக மிளிருவோம. பல்லின சமூகத்தில் வாழும் நாங்கள் ஒற்றுமை நிலை நாட்டுவது எமது கடமையாகும் அந்த வகையில் ஒவ்வொரு மதமும் தீங்கிழைப்பவை அல்ல என்றும் மதக்கருத்தை கருவூண்டச் செய்யும் விழுமிய பண்புகளைத் தற்காலத்திலும் எதிர்காலத்திலும் வளர்ப்போம்.



# வானவில்..



ரொசில்டா அன்ரன்

> “காலம் பூராகவும் நீ என் கூடவே இருந்தாலேபோதும்” பிரசாந்தின் இந்த வார்த்தைகளால் மகாவின் கண்கள் கசிவதை பார்த்த பிரசாந் “அழ வேண்டாம் உன்னை என் கண்மணி போல பாதுகாப்பேன். நீ என் தேவதை” பிரசாத்தின் வாய் அசைவினால் அவன் ஏதோ நித்திரையில் பிதற்றுகின்றான் என்பதை வினோத் புரிந்துக்கொண்டான்

பிரசாந் வழமையாக பூங்காவிற்கு மாலை நேரம் செல்வது வழக்கம். அங்கிருக்கும் இருக்கையில் கண்களில் கண்ணீருடன் தனது கடந்த காலத்தை எண்ணிப் பார்த்தான்.அவனது வாழ்க்கையின் வலியை யாராலும் உணரவே முடியாது. எல்லோரையும் போலவே பிரசாந்தின் வாழ்விலும் காதல் வந்தது. முதன்முதலாக அவளை ஆலயம் ஒன்றிலே கண்டான்.

அவள் அழகில் மயங்கினான் என்றே சொல்லலாம். காலில் அவள் அணிந்திருந்த கொலுசும், காதுகளில் அசைந்தாடும் ஜிமிக்கியும் அவள் அழகை மேலும் கூட்டியது.

“மகா மகா மகாலட்சுமி” அம்மா கூப்பிட்டதும் புள்ளி மானாய் துள்ளி ஓடினாள் மகா. “ஆகா இந்த அழகியின் பெயர் மகாலட்சுமியா?” தனக்குள் ஆனந்தப்பட்டான் பிரசாந்.

தனது நண்பன் வினோத்திடம் ஆலயத்தில் தான் கண்ட அழகியை பற்றி ஓயாது சொல்லி கொண்டே வந்தான். தனது காதலை எப்படியாவது மகாவிடம் சொல்லி விட வேண்டும் என்பதில் ஆர்வமாய் இருந்தான் பிரசாந்.

ஆனால், மகாவை எங்கே காண்பது, அவள் யார்? இவ்வாறாக பல கேள்விகள். வினோத் தனது திருமண அலுவலாக இருப்பதால் அவனை தொல்லைப்படுத்துவதில்லை. “மச்சான் இன்று பெண் வீட்ட போறாங்க நீயும் வா போய் வருவோம்” “இல்ல மச்சான் நீ போய் வா” என்று கூறிய பிரசாத் சிறிதும் தாமதிக்காமல் வினோத்தின் மறுபதிலுக்கு காத்திருக்காமல் அவ்விடத்தை விட்டு நகர்ந்தான். மகாவை காண்பதற்காக பிரசாந் நித்தமும் ஆலய முற்றத்தில் காத்திருந்தான். ஆனால் அவள் வருகை ஏமாற்றமாகவே இருந்தது.

“பிரசாந் நானும் உன்னை பல நாட்களாய் கவனிக்கிறேன் நீ முதல் மாதிரி சுறுசுறுப்பாய் இல்லை ஏன் ஒரு மாதிரியாக இருக்கின்றாய்”

அம்மாவின் கேள்விக்கு பதில் கூறாது மௌனமாக கடந்து சென்றான். நாட்கள் செல்ல செல்ல தாய் நிர்மலா மகனின் போக்கினால் கவலையுற்றாள்.

வினோத்தின் வீட்டிற்கு சென்று “தம்பி மகன் பிரசாந்தை நினைத்தால் பயமாய் இருக்கின்றது அவன் ஒழுங்காக சாப்பிடுவதும் இல்லை, வீட்டில் என்னுடன் கதைப்பதுமில்லை என்னக் காரணம் என்று தெரியுமோ உமக்கு?” “இல்லை அம்மா அவனிடம் நான் கதைக்கின்றேன்” என்றான். மறுநாள் வினோத் பிரசாத்தின் அலுவலகத்தில் சந்தித்தான். “ஏன் மச்சான் முதல் மாதிரி உன்னிடத்தில் கலகலப்பை காணவே முடியவில்லை. நீ என்ற கல்யாண நிச்சயதார்த்ததிற்கும் வரல உனக்கு என்ன நடந்தது ஏன் கொஞ்ச நாளாய் ஒரு மாதிரியாய் இருக்கின்றாய் என்னிடம் ஏன் மறைக்கிறாய்” என்று வினோத் கேட்க பிரசாத் ஓவென அழுதான். வினோத் நிலைத் தடுமாறினான்.

என்ன காரணம் என்பதை அறிய ஆவலானான். “வெளியில் எங்கயாவது போவமா?” என்று கேட்டான் வினோத். இருவரும் வெளியில் புறப்பட்டனர். வழமையாக செல்லும் பூங்கா அங்கே அவன் கண்ணெதிரே மீண்டும் அவள். “கடவுளே என்ன அதிசயம் அவள் அவள் மகா மகா என் மனதை கொள்ளை கொண்ட அவள்” அவளை பின் தொடர்ந்து ஓடினான். அவள் சிட்டுக்குருவியாய் ஸ்கூட்டியில் பறந்தாள். மீண்டும் அதே ஏமாற்றம். வினோத் பிராசந்தின் பின் ஓடி வந்த களைப்பால் வெகுவாக மூச்சிறைத்தான். “பிரசாந் அவள் யார் என்று கூட அறியாதவன் நீ அவளுடன் ஒரு நாளும் கதைத்ததே இல்லை, அவள் திருமணமானவளா இல்லையா என்று கூட தெரியல எப்படி உன் மனம் அவள்பால் ஈர்க்கப்பட்டது. அப்பா இறந்த பின் அம்மா, தங்கை இருவரும் தான் உலகமாய் வாழ்ந்தவன் நீ. அவர்கள் திருமணம் செய்த பின்பும் உன் திருமணத்தைப்பற்றி அம்மா பேச்சு எடுத்தாலே எரிந்து விழுவாய் இப்ப எப்படி உன் மனம் யார் என்றே தெரியாத பெண் மீது இவ்வளவு காதல் வந்தது” வினோத் இப்படி கேட்டதும் பிரசாந் சிறு பிள்ளை போல அழுதான்.

“தெரியல வினோத் இது தான் காதலா?” “சரி விடு உன்னை நினைத்து அம்மா கவலைப்படுறா அவ யார் என்று கண்டுப்பிடித்து சேர்த்து வைப்பது தான் என் முதல் வேலை. இன்னும் ஒரு கிழமையால எனக்கு கலியாணம் வீட்டு பக்கம் வந்து போ நிறைய கலியாண வேலை இருக்கு உதவி செய்” வினோத் கூற “சரி நான் இன்று இரவு வாரேன்” என்று பிரசாந் பதிலளித்தான்.

இரவு முழுவதும் வேலை காரணமாக நள்ளிரவு பன்னிரண்டைத் தாண்டியதும் கண்கள் சுழட்ட நித்திரை கொண்டான் பிரசாந். மகாவின் கையை பிடித்து “மகா நான் உன்னை தேடிய நாட்கள் அதிகம் ஆனால் நீ இவ்வவு சீக்கிரமாய் என் கரம் பற்றுவாய் என்று எதிர்பார்க்கல.


இருவரும் பூங்காவில் கதை பல பேசி மகிழ்ந்தனர். அவள் கரத்தை இறுக பற்றியவன் “காலம் பூராகவும் நீ என் கூடவே இருந்தாலேபோதும்” பிரசாந்தின் இந்த வார்த்தைகளால் மகாவின் கண்கள் கசிவதை பார்த்த பிரசாந் “அழ வேண்டாம் உன்னை என் கண்மணி போல பாதுகாப்பேன். நீ என் தேவதை” பிரசாத்தின் வாய் அசைவினால் அவன் ஏதோ நித்திரையில் பிதற்றுகின்றான் என்பதை வினோத் புரிந்துக்கொண்டான்.

“பிரசாந் பிரசாந் எழும்புடா விடிஞ்சுட்டு”

பிரசாந் கடிகாரத்தை பார்த்தான் நேரம் ஒன்பது. தான் கண்டது கனவு தான் என்பதை அப்போதே புரிந்துக்கொண்டான்.

கனவில் கூட அவனால் மகாவுடன் வாழ முடியவில்லை. திருமணம் நாளும் வந்தது தனது தேவதையை நினைத்துப் பார்த்தான். கைகூடா ஒரு தலைக்காதல். வினோத் மண மேடையில் மணப்பெண் அங்கே மேடையை நோக்கி அன்ன நடை போட்டு வருகிறாள்.

பிரசாந்தின் கண்களையே நம்ப முடியவில்லை மீண்டும் அவன் ஒரு தலை காதல் தேவதை அவனுக்குரியவளாய் இல்லை வினோத்தின் மனைவியாக போகிறவளாய் அங்கே. பித்துப்பிடித்தவனாக நடையாக மீண்டும் பூங்கா இருக்கையில் கண்ணீருடன். அவனது காதல் தேவதை அவனுக்குள்ளே அடங்கிப் போனாள்.



யாஸ்த்

### பஸ் கவிழ்ந்ததில் பாகிஸ்தான்

# யாத்ரீகர்கள் 35 பேர் பலி

ஈரானில் பஸ் கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில், பாகிஸ்தான் யாத்ரீகர்கள் 35 பேர் உயிரிழந்துள்ளதுடன், 18 பேர் பலத்த காயமடைந்தனர்.

பாகிஸ்தானில் இருந்து ஈராக்கிற்கு, 50க்கும் மேற்பட்ட யாத்ரீகர்கள் பஸ்சில் சென்று கொண்டிருந்த நிலையில், மத்திய ஈரானின் யாஸ்த் மாகாணத்தில், சாரதியின் கட்டுப்பாட்டை இழந்து பஸ் விபத்துக்குள்ளானது.

இதில், 35 யாத்ரீகர்கள் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர். இவர்கள் பாகிஸ்தானின் சிந்து மாகாணம் லர்கானா



நகரைச் சேர்ந்தவர்கள். 18 பேர் பலத்த காயமுற்ற நிலையில், சிகிச்சைக்காக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர்.

இந்நிலையில், பாகிஸ்தான் துணை பிரதமரும், வெளியுறவு துறை அமைச்சருமான இஷாக் தார் சமூகவலைதளத்தில் வெளியிட்டுள்ள பதிவில், "உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு இரங்கல் தெரிவித்து கொள்கிறேன். காயமடைந்த யாத்ரீகர்களுக்கு சிகிச்சை அளிக்க அனைத்து உதவிகளும் செய்யப்படும். டெஹ்ரானில் உள்ள நமது தூதருக்கு இறந்தவர்களின் உடலை, பாகிஸ்தானுக்கு திருப்பி அனுப்ப ஏற்பாடு செய்ய நான் அறிவுறுத்தி உள்ளேன்" என குறிப்பிட்டுள்ளார்.

வொஷிங்டன்

# "கமலா ஹாரிஸ் வெற்றி பெறுவார்"

'ட்ரம்பை கமலா வெற்றி கொள்வார் என்றும் அமெரிக்காவின் தலைசிறந்த ஜனாதிபதியாக கமலா ஹாரிஸ் இருப்பார்" எனவும் ஜனநாயகக்கட்சி மாநாட்டில் முன்னாள் ஜனாதிபதி பராக் ஒபாமா பேசியுள்ளார்.

அமெரிக்காவில், நவம்பர் 5இல் ஜனாதிபதித் தேர்தல் நடைபெறவுள்ளது. குடியரசு கட்சி சார்பில், முன்னாள் ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் போட்டியிடுகிறார். ஜனநாயக கட்சி சார்பில், இந்திய வம்சாவளியை சேர்ந்த கமலா ஹாரிஸ் களம் இறங்குகிறார்.

இந்நிலையில், சிகாகோவில் நடந்த, ஜனநாயக கட்சி மாநாட்டில் கலந்து கொண்ட முன்னாள் ஜனாதிபதி ஒபாமா, கமலாவுக்கு ஆதரவு தெரிவித்தார்.

அப்போது பேசிய அவர், "ஜனநாயக கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் கமலா ஹாரிஸ் மற்றும் துணை ஜனாதிபதி வேட்பாளர் டிம் வோல்ஸ் ஆகியோர் தொழிலாளர் நலனுக்காக அர்ப்பணிப்புடன் பணியாற்றியவர்கள்.

கமலா ஹாரிசால் புதிய அத்தியாயத்தை உருவாக்க முடியும். ஜனநாயக கட்சியினருக்கு வேலை இன்னும் முடியவில்லை. கமலா ஹாரிசின் வெற்றிக்கு பாடுபட வேண்டும். நாட்டின் தலைசிறந்த ஜனாதிபதியாக அவர் திகழ்வார். அமெரிக்கர்களின் எதிர்காலத்திற்காக வாக்களிக்க வேண்டும். கமலாவிடம் தோற்று விடுமோ என்ற பயத்தில் ட்ரம்ப் உள்ளார்.

ஜோ பைடனை எனது ஜனாதிபதி என்று அழைப்பதில் பெருமிதம் கொள்கிறேன். அரசியலில் மிகவும் அரிதான காரியத்தைச் செய்யும் தன்னலமற்றவர். நாட்டின் நலனுக்காக தனது சொந்த இலட்சியத்தை ஒதுக்கி வைத்தவர்.

பெரிய ஆபத்து நேரத்தில் ஜனநாயகத்தை பாதுகாத்த ஒரு தலைசிறந்த ஜனாதிபதியாக ஜோ பைடனை வரலாறு நினைவு கூரும். அவரை எனது நண்பர் என்று அழைப்பதிலும் பெருமிதம் கொள்கிறேன்" என்றார்.

புதுடெல்லி

### பிரதமர் மோடி

# உக்ரைனுக்கு ரயிலில் பயணம்

பிரதமர் மோடி அரசு முறை பயணமாக போலந்து சென்றுள்ள நிலையில், அங்கிருந்து அவர், உக்ரைனுக்கு ரயிலில் செல்லவுள்ளார்.

உக்ரைன் மீது ரஷ்யா தாக்குதல் நடத்தி வரும் நிலையில், பல விமானங்கள் இரத்து செய்யப்பட்டுள்ளன. இந்நிலையில், பல நாட்டு தலைவர்கள் ரயில் மூலமே உக்ரைன் வருகின்றனர். இதன் காரணமாகவே, பிரதமர் மோடியும் உக்ரைனுக்கு ரயிலில் செல்லவுள்ளார்.

குறிப்பாக, அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன், பிரான்ஸ் ஜனாதிபதி இமானுவேல் மேக்ரான், ஜேர்மன் சான்சிலர் ஓலப் ஸ்கால்ஜ், கனடா பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ, பிரிட்டன் முன்னாள் பிரதமர் ரிஷி சுனக், இத்தாலி பிரதமர் ஜியார்ஜியா மெலோனி, ஜப்பான் பிரதமர் பிமியோ கிஷிடோ ஆகியோர் ரயில் மூலம் உக்ரைன் பயணித்துள்ளனர்.



சென்னை

# "நாடெங்கும் நமது கொடி பறக்கும்"

நாளை முதல் நாடெங்கும் நமது கொடி பறக்கும். தமிழ்நாடு இனி சிறக்கும். வெற்றி நிச்சயம் என்று நடிகரும் தமிழக வெற்றிக் கழக கட்சியின் தலைவருமான விஜய் தெரிவித்துள்ளார்.

நடிகர் விஜய் 'தமிழக வெற்றிக் கழகம்' என்ற புதிய கட்சியை கடந்த பெப்ரவரி மாதம் அதிகாரபூர்வமாக அறிவித்தார். எதிர்வரும் 2026 தமிழக சட்டசபை தேர்தலில் போட்டியிடுவதாக விஜய் அறிவித்துள்ளார். இருப்பினும் கட்சியின் கொடி, சின்னம் அறிவிக்கப்படாமல் இருந்தது.

இந்நிலையில் தமிழக வெற்றிக் கழக தலைவர் விஜய் இன்று வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது,

என் நெஞ்சில் குடியிருக்கும் தோழர்களே. சரித்திரத்தின் புதிய திசையாகவும் புதிய விசையாகவும் ஒவ்வொரு நாளும் அமைந்தால் அது ஒரு பெரும் வரம். அப்படியான வரமாக இறைவனும் இயற்கையும் நமக்கு அமைத்துக் கொடுத்திருக்கும் நாள்தான் 2024 ஆகஸ்ட் 22. நம் தமிழக வெற்றிக் கழகத்தின் முக்கிய அடையாளமான கொடி அறிமுகமாகும் நாள். தமிழ்நாட்டின் நலனுக்காக உழைத்து, நம் மாநிலத்தின் அடையாளமாகவும் மாறப்



போகும் நம் வீரக் கொடியை, வெற்றிக்கொடியை நாளை நம் தலைமை நிலையச் செயலகத்தில் அறிமுகப்படுத்தி, கழகக் கொடிப் பாடலை வெளியிட்டு, கழகக் கொடியை ஏற்றி வைக்கிறோம் என்பதைப் பெருமகிழ்வுடன் அறிவிக்கிறேன். நாளை முதல் நாடெங்கும் நமது கொடி பறக்கும். தமிழ்நாடு இனி சிறக்கும். வெற்றி நிச்சயம் என்றார்.

சென்னை

### வடிவேலு தொடர்ந்த வழக்கில்

# பதிலளிக்க சிங்கமுத்துவுக்கு உத்தரவு

நடிகர் சிங்கமுத்து மீது நடிகர் வடிவேலு தொடர்ந்த மான நஷ்ட வழக்கில், சிங்கமுத்து பதிலளிக்க சென்னை உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

சிங்கமுத்து, யூடியூப் சேனல்களில் அவதூறாக பேசியதாகக்கூறி ரூ.5 கோடி மானநஷ்ட ஈடு கேட்டு வடிவேலு சென்னை உயர்நீதிமன்றில் வழக்கு தொடர்ந்தார்.



அதில்; "பல்வேறு யூடியூப் சேனல்களுக்கு நடிகர் சிங்கமுத்து அளித்த பேட்டியில், துளி கூட உண்மையில்லாத பல பொய்களைக் கூறி, தரக்குறைவாக பேசியுள்ளார். எனவே சிங்கமுத்து ரூ.5 கோடியை எனக்கு நஷ்டஈடாக வழங்க உத்தரவிட வேண்டும். அத்துடன் என்னைப் பற்றி அவதூறு பரப்ப சிங்கமுத்துவுக்கு தடை விதிக்க வேண்டும்" என கோரியிருந்தார்.

இந்த வழக்கு விசாரணைக்கு வந்த நிலையில், நீதிபதி, இந்த வழக்கில் நடிகர் சிங்கமுத்து 2 வாரத்துக்குள் பதிலளிக்க வேண்டும் என உத்தரவிட்டுள்ளார்.





### ஹொக்கி போட்டியில்

# தேசிய மட்டத்துக்கு தெரிவு

அஸ்ஹர் இப்றாஹிம்

கிழக்கு மாகாண பாடசாலைகளுக்கு இடையிலான ஆண், பெண் இருபாலாருக்குமான ஹொக்கி போட்டிகள் திருகோணமலை மெக்கெய்ஸர் விளையாட்டு மைதானத்தில் சனிக்கிழமை (09) இடம்பெற்றது.

பெண்கள் பிரிவில் ஹொக்கி போட்டியில் கலந்து கொண்ட அம்பாறை டீ.எஸ்.சேனநாயக தேசியக்கல்லூரி முதலிடத்தைப் பெற்று சம்பியன்களாகவும், ஆண்கள் பிரிவில் இரண்டாம் இடத்தையும் பெற்றுக்கொண்டன. இவ்விரு குழு மாணவர்களும் நடைபெறவுள்ள தேசிய மட்ட போட்டிகளுக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.



### சாய்ந்தமருது ஓ.ஜி. விளையாட்டுக் கழகத் தொடரின்

# இறுதிப் போட்டியில் காரைதீவு விவேகானந்தா

அஸ்ஹர் இப்றாஹிம்

சாய்ந்தமருது ஓ.ஜி. விளையாட்டு கழகம் நடாத்தும் 100 பந்துகள் கொண்ட கடினபந்து கிரிக்கெட் தொடரிம் இறுதிப் போட்டிக்கு காரைதீவு விவேகானந்தா விளையாட்டுக் கழகம் தகுதி பெற்றுள்ளது.

சாய்ந்தமருது பொது விளையாட்டு மைதானத்தில் ஞாயிற்றுக்கிழமை(18) நடைபெற்ற 100 பந்துகள் கொண்ட இத்தொடரின் அரையிறுதிப் போட்டியில் சாய்ந்தமருது ஹொலிஹீரோஸ் விளையாட்டுக் கழகத்தை வென்றே இறுதிப் போட்டிக்கு விவேகானந்தா தகுதி பெற்றுள்ளது.



# சிற்றிக்கு மீளத் திரும்பும் குன்டோகன்

ஸ்பானிய லா லிகா கால்பந்தாட்டக் கழகமான பார்சிலோனாவின் மத்தியகளவீரரான இல்கி குன்டோகனைக் கைச்சாத்திடுவதில் அவரது முன்னாள் இங்கிலாந்து பிறீமியர் லீக் கழகமான மன்செஸ்டர் சிற்றி முன்னிலையிலுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பார்சிலோனாவுடனான 33 வயதான குன்டோகனின் ஒப்பந்தம் இன்னும் ஓராண்டு உள்ளபோதும் தாம் கைச்சாத்திட்ட முன்களவீரரான டனி ஒல்மோவைப் பதிவு செய்ய முடியாததால் குன்டோகனை கழகத்திலிருந்து வெளியேற பார்சிலோனா அனுமதிக்கையில், பிறீமியர் லீக்க்குக்கு திரும்புதையே குன்டோகன் விரும்புவதாகக் கூறப்படுகிறது.

எவ்வாறாயிமும் குன்டோகன் வினவும் ஒப்பந்த காலமே சிக்கலுக்குரியதாகக் காணப்படுவதாகக் குறிப்பிடப்படுகிறது.



### எலைட் பனல் மத்தியஸ்தர்

# கல்முனை ஜப்ரான்

அஸ்ஹர் இப்றாஹிம்

ஆசிய கால்பந்தாட்ட சம்மேளனத்தின் எலைட் பனல் மத்தியஸ்தராக கல்முனையின் ஏ.எம்.ஜப்ரான் தரமுயர்த்தப்பட்டுள்ளார்.

சம்மேளனத்தின் மத்தியஸ்தர் அகடமி குழாமில் 2018ஆம் ஆண்டிலிருந்து 4 ஆண்டுக்கான தொடர் பயிற்சியை மலேசியாவில் பூர்த்தி செய்ததோடு, அகடமியால் நடாத்தப்பட்ட தொடரில் சிறப்பாக மத்தியஸ்தர் கடமையை வகித்ததால் ஜப்ரான் எலைட் பனல் மத்தியஸ்தராக தரம் உயர்த்தப்பட்டுள்ளார்.

கல்முனை சாஹிரா தேசிய கல்லூரியில் உடற்கல்வித்துறை பயிற்றுவிப்பாளராக கடமையாற்றும் ஜப்ரான், கல்லூரியின் பழைய மாணவருமாவார்.

தெற்காசிய கால்பந்தாட்டத் தொடருக்கு மத்தியஸ்தராக கலந்துகொள்வதற்காக தற்போது நேபாளத்துக்கு சனிக்கிழமை (17) பயணமாகியுள்ளார்.

### வட மாகாண 20 வயதுப் பிரிவு குத்துசண்டை:

# கபிலனுக்கு முதலிடம்



எஸ்.ஆர்.லெம்பேட்

வட மாகாண ரீதியிலான 20 வயதுகுட்பட்ட குத்துசண்டை போட்டியானது முல்லைத்தீவில் சனிக்கிழமை (17), ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற நிலையில், மடு கல்வி வலய பெரிய பண்டிவிரிச்சான் மகா வித்தியாலய மாணவன் விஜிதன் கபிலன் முதலாமிடத்தைப் பெற்றுள்ளார்.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் வியாழக்கிழமை, 22 ஆகஸ்ட் 2024, இல.08, ஹூணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு-02 இல் வடிவமைக்கப்பட்டு, இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.